வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු





மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை



Email : news@eelanadu.lk | மலர் : 04 | 16.05.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 158 | பக்கங்கள் : 16


## ஜனாதிபதி - தமிழ் எம். பிக்கள் பேச்சு:

# பல விடயங்கள் அலசப்பட்டு முடிவின்றி நிறைவடைந்தது

**• பறிக்கப்பட்ட அதிகாரங்கள் மீண்டும் மாகாணத்துக்கு**
**• அடுத்த பேச்சு ஜூனில்**

கொழும்பு, மே 16

மாகாண சபை தேர்தல், 13ஆவது திருத்தச் சட்டம், இடைக்கால நிர்வாக வரைவு, புதிய அரசியல் யாப்பு உட்பட பல விடயங்கள் குறித்து ஜனாதிபதி - தமிழ் எம். பிக்கள் நேற்றுக் கூடிப் பேசினர். எனினும், இந்த விடயங்கள் தொடர்பில் எந்த ஒரு தீர்க்க மான முடிவும் எடுக்கப்படாமலே பேச்சு நிறைவடைந்தது.

15

## போர் காலத்தில் சேவையாற்றிய மருத்துவர் சிவகுமாரன் காலமானார்!



யாழ்ப்பாணம், மே 16

போர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் அரும் சேவை யாற்றிய மருத்துவர் சபாரட்ணம் சிவகுமாரன் நேற்று முன் தினம் இரவு கொழும்பில் காலமா னார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அர சியல்துறை பொறுப்பாளர் தியாகதீபம் திலீபன் இந்திய படையினருக்கு எதிராக உண் ணாவிரதம் இருந்து உயிர் நீத்தபோது, அவரின்

15

## தமிழ் பெண் இராணுவத்தினர் முல்லைத்தீவில் போராட்டம்!

முல்லைத்தீவு, மே 16

கொக்காவில் இரா ணுவ முகாமில் பணியாற் றும் தமிழ் பெண் இராணு வத்தினர் நேற்றிரவு வேளையும் போராட்டத் தில் எதிர்ப்பு தெரிவித்த னர். அவர்கள் பணியாற்றி வந்த கொக் காவில் முகாம் வாசல் முன்பாகவே போராட் டத்திலேயே ஈடுபட்டு வருகின்றனர்.

கொக்காவில் இராணுவ முகா மில் இருந்து

15

## ரணிலிடமா மகிந்தவிடமா அதிகாரங்கள் யார் வசம்?

கேள்வி எழுப்புகிறார் செல்வம் எம். பி.

கொழும்பு, மே 16

ஜனாதிபதி உத்தர விட்ட பின்னரும் சில செயல்பாடுகள் இடம் பெறுகின்றன. உண்மை யில் அதிகாரம் ஜனாதி பதியிடமா அல்லது மகிந்தவிடமா என்ற சந் தேகம் எழுகிறது என்று வன்னி மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் செல் வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று திங்கட்கிழமை நினைவு நிகழ்வு ஒன்றில் பங் கேற்று உரையாற்றிய போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.


வவுனியாவில் வாள் வெட்டு அதிகரித்துள் ளது. கடத்தல் சம்பவங் கள் பணம்பறிப்பு, தற் கொலை என்பன இடம் பெற்று வருகின்றன. பொலிஸார் இருந்தும் வவுனியா மோசமான நிலையை அடைந் துள்ளது. பொலி ஸாருக்கு

15

## வடக்கு, கிழக்கு உட்பட மூன்று ஆளுநர்கள் பதவி நீக்கப்பட்டனர்!







கொழும்பு, மே 16

வடக்கு, கிழக்கு உட் பட மூன்று மாகாணங் களின் ஆளுநர்கள் ஜனாதி பதியால் பதவி நீக்கப் பட்டனர் என்று ஜனாதி பதியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

நேற்று திங்கட் கிழமை முதல் நடை முறைக்கு வரும் வகை யில் வடக்கின் ஆளுநர் ஜீவன் தியாகராஜா, கிழக் கின் ஆளுநர் அநுராதா யஹம்பத், மேல் மாகா ணத்தின் ஆளுநர் அட்மி ரல் வசந்த கரன்னகொட ஆகியோரே இவ்வாறு பதவி நீக்கப்பட்டனர்.

இந்த மூன்று மாகா ணங்களுக்கும் புதிய ஆளுநர்கள் நாளை புதன்கிழமை நியமிக்கப் படவுள்ளனர் என்றும் ஊடகப் பிரிவு தெரிவித் துள்ளது.

பதவி நீக்கப்பட்ட மூன்று ஆளுநர்களும் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் நியமிக்கப் பட்டிருந்தனர். மூவருக்கும்

15



## வடக்கு ஆளுநராக மீண்டும் சார்ள்ஸ்?

கொழும்பு, மே 16

வடக்கு மாகாணத் தின் ஆளுநராக திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் மீண்டும் நியமிக்கப்பட வுள்ளார் என்று கொழும்பு உயர் அரசியல் பீடத்தின் நம்பிக்கையான வட்டா ரங்கள் தெரிவித்தன.

வடக்கு, கிழக்கு உட் பட மூன்று மாகாணங் ளின் ஆளுநர்கள் நேற்று முதல் நடை முறைக்கு வரும் வகையில் பதவி நீக் கப்பட்டனர். இவர்க ளுக்கு பதிலாக புதிய ஆளு நர்களை நாளை புதன் கிழமை ஜனாதிபதி நியமிக்கவுள்ளார்.

இதில், 2019 டிசெம்பர் - 2021

15

உருத்திரபுரீஸ்வரர் ஆலய விவகாரம்:

## பெருந்துயர் நடந்த நாளில் ஆக்கிரமிப்புக்கு நாள் குறிப்பது இனக்குரோதத்தின் உச்சம்!

### சந்திரகுமார் ஜனாதிபதிக்கு கடிதம்

கிளிநொச்சி, மே 16

கிளிநொச்சி - உருத் திரபுரத்தில் அமைந்திருக் கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க சிவன் (உருத்திரபுர தீஸ்வரர்) ஆலயத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி தொல்பொருள் திணைக் களம் ஆய்வு நடவடிக்கை யில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருப்பதா னது இனக்குரோதத்தின் உச்சமாகவே நோக்கப்படு கிறது. தமிழ் மக்களுக்கு பெரும் துயர் நிகழ்ந்த ஒரு தினத்தில் தொல்லி யல் திணைக்களமும் தனது நடவடிக்கைக்கு நாள குறித்திருப்பது கண் டனத்துக்கு உரி யது என்று

15

## சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்க கடும் சட்டங்களை உருவாக்குங்கள்!

சட்டத்துறையினருக்கு ஜனாதிபதி உத்தரவு!

கொழும்பு, மே 16

சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கு கடுமை யான சட்டங்களை உருவாக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சட்டத் துறையினருக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

ஒரு சில ஆசிரியர்கள், முதியவர்கள் மற்றும் சமூகத் தின் பல்வேறு தரப்பினரால் தொடர்ச்சியாக இடம் பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்களை விரை வாக தடுக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக் காட்டிய ஜனாதி பதி, அவ்வாறான

15

## ஐ. எம். எவ். கடன் மறுசீரமைப்பு ஒக்ரோபருக்குள் நிறைவடையும்!

கொழும்பு, மே 16

சர்வதேச நாணய நிதி யத்தின் (ஐ. எம். எவ்) விரி வாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் முதலாவது மதிப்பாய்வு மூலம் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு பேச்சுகள் செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபர் மாதத்துக்குள் முடிவடையும் என்று சர்வ தேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஷ்ணா சிறீ

15

## நினைவேந்தல் உரிமை சகல மக்களுக்கும் உண்டு!

ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, மே 16

"நினைவேந்தல் உரிமை இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் உண்டு. ஜனநாயக நாட்டி ல் எந்த இன மக்களினதும் உரிமைகள் பறிக்கப்பட இட மில்லை. இதேபோல் நினைவேந்தல் உரிமையை யும் எவரும் தட்டிப் பறிக்க முடியாது." என

15

## சட்டம் ஒழுங்கை காப்பாற்றவே ரணிலை நாம் தெரிவுசெய்தோம்!

சிறீ லங்கா பொதுஜன பெரமுன

கொழும்பு, மே 16

நாட்டில் ஜனநாயகம், சட்டம், ஒழுங்கு ஆகிய வற்றை முறையாக செயல் படுத்த எமது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதிப்படுத்தவில்லை. இதனாலேயே ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதி பதியாக தெரிவு செய் தோம். ஆகவே, ஜனாதி பதியின் அதிகாரங் களை சவாலுக்கு உட்படுத்த

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

இன்றைய உலகில் எதைச் சொல்வதானாலும், அது பற்றிய தரவுகளுடன், ஆதாரங்களுடன் சொல்ல வேண்டும்.

இரண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் தத்தமது நிறுவனம் சம்பந்தமாக அல்லது ஒரு வர்த்தக பரிமாற்றம் தொடர்பாக சந்தித்து பேசவிருக்கிறார்கள் என்றாலே, இருவரும் தத்தம் நிறுவனங்கள் பற்றிய விபரங்களைத் தொகுத்து அதனை ஓர் ஆவணமாகப் பரிமாறிக்கொள்வார்கள்.

அது கொக்கோ-கோலா நிறுவனமாக இருந்தாலும் அந்த நிறுவனத்தைப் பற்றி உலகில் எல்லோருக்கும் தெரிந்திருந்தாலும், கொக்கோ - கோலா நிறுவனம் வேறு ஒரு நிறுவனத்துடன் வர்த்தக நடவடிக்கை தொடர்பாக பேசுகின்றபோது தமது நிறுவனம் பற்றிய ஓர் ஆவணத்தை முதலில் கொடுத்து அறிமுகமாகிக் கொண்டே பேச்சைத் தொங்குவார்கள்.

ஆனால், நாம் நமக்கு ஏற்பட்ட பல்வேறு இழப்புகள் பற்றிய தகவல்களையே விஞ்ஞானபூர்வமாக இது வரை நிறுவியதில்லை. அதிகம் ஏன் முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் என்பதை நிறுவும் வகையில் யாரிடமும் ஓர் ஆவணம் இருப்பதாகத் தெரியவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்திலும் அது தான் நிலைமை. இதுபற்றி இந்தப் பத்தியில் பல தடவைகள் குறிப்பிட்டிருக்கின்றோம்.

ஆனால், முதல் தடவையாக நமது மக்கள் பிரதிநிதி ஒருவர் ஒரு விடயம் தொடர்பாக ஆவணத்தைத் தயாரித்து பாராளுமன்றில் சமர்ப்பித்திருக்கிறார்.

அவர் பற்றி சில தினங்களுக்கு முன்னரும் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். தமிழரசு கட்சியின் தலைவர் பதவியில் குறிவைத்துக் கொண்டு, கிளிநொச்சியில் மாத்திரம் அரசியல் பணிகளை செய்துகொண்டிருப்பது எந்த வகையிலும் அவருக்கு உதவப் போவதில்லை என்று எழுதியதைப் படித்தாரோ தெரியவில்லை.

தொல்லியல் திணைக்களம் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் செய்யும் பௌத்த ஆக்கிரமிப்பு தொடர்பாக கடந்த வாரம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய தமிழரசு எம். பி., சிறீதரன், வழக்கம் போல உணர்ச்சிமிக்க பேச்சை மாத்திரம் பேசவில்லை. கூடவே, இதுவரை தனக்குத் தெரிந்த - அதுபோன்ற முப்பத்திநான்கு ஆக்கிரமிப்புகள் பற்றிய விவரங்களை பட்டியலிட்டு ஓர் ஆவணமாக தமிழிலும் ஆங்கிலத்திலும் தயாரித்து பாராளுமன்றில் சமர்ப்பித்தார்.

அந்த ஆவணத்தை இந்த ஊர்க்குருவிக்கும் அனுப்பியிருந்தார். அதனைப் படித்துவிட்டு அவருக்கு அழைப்பெடுத்து சொன்னேன், 'அரசியலுக்கு வந்த இந்த பதின்மூன்று ஆண்டுகளில் முதல் தடவையாக ஓர் உருப்படியான வேலை செய்திருக்கிறீர்கள்' என்று.

அதனை எனக்கு தெரிந்த பலருக்கும் பகிர்ந்துகொண்டேன். நேற்று முன்தினம் ஒரு நண்பரிடமிருந்து ஒரு தகவல் வந்தது. திறந்து பார்த்த போது, அது புதுடில்லியில் பாரதிய ஜனதா கட்சிக்கு நெருக்கமானவர்கள் நடத்தும் யூ-ரியூப் சனலின் நிகழ்ச்சி ஒன்றின் இணைப்பு அது. அந்த இணைப்பில் அவர்கள் இந்த சிறீதரனின் ஆவணத்தை வைத்து ஆய்வு செய்துகொண்டிருந்தார்கள்.

அது ஒரு சிறிய யூ-ரியூப் சனல் என்று பலரும் கடந்து சென்றிருப்பார்கள். ஆனால், அது ஆளும் பாரதிய ஜனதா கடசியின் குரலாக ஒலிக்கின்ற ஒன்று என்பது கவனிக்கப்படவில்லை.

இலங்கையில் இந்துக்கள் (சைவர்கள்) ஆபத்தில் இருக்கிறார்கள் என்று அவர்கள் குரல் எழுப்புவதை காண முடிந்தது. அதுபற்றிய செய்தியையும் வாசகர்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 'ஈழநாடு'வில் தலைப்புச் செய்தியாக படித்திருப்பார்கள்.

இன்றைய பத்தியில் அது பற்றி சொல்ல வருவதற்கு வேறு ஒரு காரணமும் உண்டு.

கடந்த பதினோராம் திகதி தமிழ் எம். பிக்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையே நடைபெற்ற பேச்சில், சிறீதரன் எம். பி. பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அந்த ஆவணம் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டதாம். உடனே, அந்த ஆவணத்தின் பிரதியை தன்னிடம் தருமாறு ஜனாதிபதி கேட்டபோது, அதனை சிறீதரனிடம் வாங்கி ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதியிடம் கையளித்திருக்கிறார்.

அதனைக் கையளிக்கும் போது அவர் சென்னதுதான் கிளைமாக்ஸ், 'இது முழுமையானது அல்ல, நான் ஒன்று தயாரித்துக் கொண்டிருக்கிறேன். அந்த முழுமையான ஆவணத்தை விரைவில் உங்களுக்கு தருகின்றேன்' என்றாராம் அவர்.

எங்கே இந்த விடயத்தில் சிறீதரன் பெயர் எடுத்து விடக்கூடாது என்பதுதான் அவரின் பிரச்னையோ என்னவோ.

யார் குற்றினாலும் நமக்கு அரிசி கிடைத்தால் சரிதானே.

**- ஊர்க்குருவி**

# புதிய கட்சியை சம்பிக்க வரும் 22இல் அறிவிப்பார்

கொழும்பு, மே 16

பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க 'குடியரசு முன்னணி' என்ற தனது புதிய கட்சியை ஆரம்பிக்கவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் 22ஆம் திகதி சம்பிக்க ரணவக்க புதிய கட்சியை ஆரம்பிக்கவுள்ளார் என்று கூறப்படுகின்றது. இலங்கை குடியரசாகி எதிர்வரும் மே 22ஆம் திகதியுடன் 51வருடங்கள் பூர்த்தியாகின்றன. தேசிய அபிலாசை களை கொண்டுள்ளார் என கூறப்படும் சம்பிக்க ரணவக்க சமீபத்தில் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியிலிருந்து வெளியேறினார். எனினும், அவர் எதிர் கட்சி பாராளு மன்ற உறுப்பினராகவே தொடர்ந்தும் செயல்படுகின்றார்.

சம்பிக்க ரணவக்க தேசியவாத கொள்கைகளை கொண்ட ஜாதிஹ ஹெல உறுமய கட்சிக்கு தலைமை தாங்கினார்.

2022 அல் அவர் 43ஆவது படையணியை ஆரம்பித்தார். இந்த நிலையில், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து அவர் புதிய கட்சியை ஆரம்பிக்கவுள்ளார் என்று அண்மையில் தகவல்கள் வெளியாகின. இதன்படி, அவர் எதிர்வரும் 22ஆம் திகதி தனது கட்சியை அறிவிப்பார் என்று தெரிய வருகின்றது. (ஐ)

# கல்வி வலயம் நடத்திய பரீட்சையில் தனியார் நிறுவனத்தின் வினாத்தாள்!

## விசாரணைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 16

யாழ்ப்பாணம் கல்வி வலய பாடசாலைகளில் கடந்த வாரம் நடைபெற்ற ஆங்கில மொழி மூலமான விஞ்ஞான பரீட்சையில் தனியார் கல்வி நிலையம் ஒன்றின் வினாத்தாள் வழங்கப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்று வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அருளம்பலம் உமாமகேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கடந்த வாரம் யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கில மொழி மூலம் விஞ்ஞான பரீட்சை நடைபெற்றது. இந்தப் பரீட்சையில் வழங்கப்பட்ட வினாத்தாள் ஏற்கனவே தனியார் கல்வி நிலையம் ஒன்றால் நடத்தப்பட்ட பரீட்சையின் வினாத்தாள் என்று தெரிய வந்தது.

இந்த நிலையில், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலரிடம் இது தொடர்பில் கேட்டபோது, "தனியார் கல்வி நிலையத்தின் பரீட்சை வினாத்தாள் யாழ். கல்வி வலயத்தால் வழங்கப்பட்டது தொடர்பில் ஊடகங்களில் வெளிவந்த செய்திகள் தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு கவனம் செலுத்தி விசாரணைகளை ஆரம்பித்துள்ளது -என்றார். (ஐ)

# முள்ளிவாய்க்கால் கஞ்சி காரைநகரில் வழங்கப்பட்டது!



யாழ்ப்பாணம், மே 16

காரைநகர் - வலந்தலை முத்துமாரியம்மன் ஆலய முன்றலில் நேற்று திங்கட்கிழமை முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் படுகொலை செய்யப்பட்ட மக்களின் 14ஆவது ஆண்டு நினைவேந்தலை ஒட்டி இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

கொல்லப்பட்ட உறவுகளின் ஆத்மா சாந்தியடைய வேண்டி ஆலய முன்றலில் ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் காரைநகர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் பாலச்சந்திரன், உப தவிசாளர் , சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# சங்கிலியன் தோரண வாயில் புனரமைப்பு நிறைவு கட்டத்தில்

யாழ்ப்பாணம், மே 16

நல்லூர் சங்கிலியன் தோரண வாயில் புனரமைப்புப் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. இதையடுத்து தோரண வாயில் நீர் விசிறி தூய்மைப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழர்களின் வரலாற்றுத் தொன்மையை எடுத்தியம்பும் வகையில் நல்லூரில் உள்ள சங்கிலியன் தோரண வாயிலானது யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தினால் புனரமைக்கப்பட்டு வருகிறது.

அத்துடன், மரபுரிமைச் சின்னங்கள் அழிந்து போகாமல், அவற்றை பாதுகாத்து, எமது எதிர்கால சந்ததியினருக்கு அந்த சின்னங்களை ஒப்படைக்கவேண்டிய தார் மீக கடமையுணர்வோடு யாழ்ப்பாணம் மரபுரிமை மையம் முன்னெடுக்கப்படும் முதலாவது செயல் திட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கவிதை நூல் வெளியீட்டு விழா!

யாழ்ப்பாணம், மே 16

ஓய்வுபெற்ற வங்கியாளரும் கவிஞரும் எங்கள் முற்றம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான அழ. பகீரதனின் ஐந்தாவது கவிதைத் தொகுப்பான 'ஐப்பசியில்' நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

காலையடி, பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராஜா மகேந்திரன் குடும்ப ஞாபகார்த்த உள்ளரங்கில் நடைபெறும் இந்த நிகழ்வு ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளரும் மறுமலர்ச்சி மன்றத்தின் தலைவருமான சு. சுந்தரசிவம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் நூலுக்கான அறிமுக உரையை கவிஞரும் ஆசிரியருமான ந. குகபரன் ஆற்றவுள்ளார். இதைத் தொடர்ந்து சபையோரின் கருத்துரையும், நூலாசிரியரின் ஏற்புரையும் நடைபெறும்.(ஐ)

ஈழநாடு
Eelanadu
16.05.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழர் தரப்புகளின் கவனத்துக்கு?

நாட்டின் அரசியல் நிலைமைகள் எவ்வாறு நகரப் போகின்றன என்பதை இப்போதைக்கு ஊகிக்க முடியாது. அரசியலை துல்லியமாக எவராலும் கணிக்க முடியாது. ஆனால், கடந்த கால அனுபவங்களை முன்வைத்து சில ஊகங்களை செய்யமுடியும். இந்த பின்புலத்தில் நோக்கினால் இலங்கைத் தீவின் எதிர்காலம் என்பது அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில்தான் நிலைகொண்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்கவை பொறுத்தவரையில் அவர் – அவரின் அரசியல் வாழ்வில் – அவருக்கான இறுதி அரசியல் பரீட்சையை எழுதவுள்ளார்.

அவரைப் பொறுத்தவரையில் இந்தப் பரீட்சையில் வெற்றிபெற்றேயாக வேண்டும். ரணில் அடிப்படையில் ஜனவசியமுள்ள தலைவராக இருந்ததில்லை. ஆற்றல்மிக்க ஓர் அரசியல்வாதியாக இருந்தபோதிலும்கூட அவரால் சாதாரண சிங்கள மக்களின் மனதில் இடம்பிடிக்க முடியவில்லை. ஆனால், நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும் அசாதாரண அரசியல் சூழலும் அவரை மீண்டும் அதிகாரத்தில் அமர்த்தியிருக்கின்றது. அதிகாரத்தில் இருந்தாலும்கூட மக்கள் ஆணையை பெறாத ஒருவராகவும் அதேவேளை பாராளுமன்ற பலமில்லாத ஒருவராகவுமே அவர் இருக்கின்றார்.

இந்த பின்புலத்தில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலின் பின்னர்தான் நாட்டின் எதிர்காலம் தொடர்பில் தெளிவானதொரு முடிவுக்கு வரமுடியும். இந்த பின்புலத்தில் தமிழர் தரப்புகள் என்ன செய்யப் போகின்றன? வெறுமனே தங்களுக்குள் – யார் சுத்தமானவர்களென்று முட்டி மோதிக் கொண்டிருக்கப் போகின்றனவா அல்லது சூழ்நிலைகளை துல்லியமாகக் கணித்து, அதற்கேற்ப தங்களை தயார்படுத்திக் கொள்ளப்போகின்றனவா?

அரசியலில் – அதிலும் குறிப்பாக, அதிகாரத்தை கோரும் மக்கள் கூட்டம் ஒன்றை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் தரப்புகள் தங்களை சதா தயார்படுத்திக் கொண்டும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப புதுப்பித்துக் கொண்டுமிருக்க வேண்டும். இல்லாவிட்டால் புதிய சவால்களை எதிர்கொள்ள முடியாமல் போய்விடும்.

இலங்கைத் தீவின் அரசியலில் ஏதோவொரு வகையில் இந்திய, அமெரிக்க, சீனா ஆகிய நாடுகளின் முக்கோண வியூகத்துக்குள் சிக்கியிருக்கின்றது. இலங்கை விரும்பினால்கூட இதிலிருந்து விடுபட முடியாது. இவ்வாறானதொரு பின்புலத்தில் குறித்த சக்திகள் என்ன சிந்திக்கின்றன – அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை எவ்வாறு நோக்குகின்றன?

இந்தக் கேள்விகளுக்கு இப்போதைக்கு எதனையும் ஊகிக்க முடியாது. ஆனால், நம்மிடம் கடந்தகால அனுபவங்கள் இருக்கின்றன. 2015 ஆட்சி மாற்றத்தின்போதான அனுபவங்கள் இருக்கின்றன. இவற்றை கருத்தில் கொண்டு தமிழர் தரப்பு தங்களை எவ்வாறான சவால்களுக்கும் முகம் கொடுக்கக் கூடியவாறு தயார்படுத்திக்கொள்ள வேண்டும். பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை உச்சளவில் வெற்றிகொள்ளும் உபாயங்கள் தொடர்பிலும் சிந்திக்க வேண்டும். இதேவேளை, புதிய சவால்களை எதிர்கொள்வதற்கான ஆற்றலுடனும் இருக்க வேண்டும். இது தொடர்பில் தமிழர் தரப்பு சிந்திக்க வேண்டும்.

# உருத்திரபுரீஸ்வரர் ஆலய சூழலில் மத பதற்றம் ஏற்படுவதை தடுங்கள்!

### ஜனாதிபதிக்கு ஆலய நிர்வாகம் மனு

*கிளிநொச்சி, மே 16*

கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தில் மதப் பதற்றம் மிகுந்த சூழல் ஏற்படுவதை நாம் விரும்பவில்லை. எனவே, அதனை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு ஆலயத்தின் அறங்காவலர் சபையினர் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக வவுனியாவில் அமைந்துள்ள ஜனாதிபதியின் உப அலுவலகத்துக்கு நேற்று திங்கட்கிழமை சென்ற ஆலய அறங்காவலர் சபையினர் ஜனாதிபதிக்கான மனு ஒன்றை அதிகாரியிடம் கையளித்தனர். இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மேலும், எமது ஆலய வளாகத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நில அளவை செய்யப்படவுள்ளதாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அந்தவகையில், எமது ஆலயம் அமைந்துள்ள காணியில் புராதன தொல்பொருள் சின்னம் அமைந்துள்ள நிலப் பரப்பை எல்லைப்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை எதிர்வரும் 18ஆம் திகதி மேற் கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த செயல்பாட்டுக்கு நாம் எமது முழுமையான எதிர்ப்பை பதிவு செய்கிறோம்.

ஏற்கனவே, கடந்த 2021.03.22ஆம் திகதி அளவீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காக வருகைதந்த தொல்பொருள் திணைக்களத்தினர், மக்கள் எதிர்ப்பின் காரணமாக ஆலய வளாகத்தினுள் உள்நுழைய முடியாதவாறு வெளியேற் றப்பட்டிருந்தமையையும் தங்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

இன, மத வேறுபாடுகளற்று தொல்பொருள் சின்னங்களையும் அவற்றின் தொன்மையையும் பாதுகாக்க வேண்டிய தொல்பொருளியல் திணைக்களம் தமிழர்களின் பூர்வீக நிலங்களில் பௌத்த மதத்தை முன்னிலைப்படுத்தும் வகையில் இனத்துவ ஆதிக்கத்தை வெளிப்படுத்தி வருவதாலும், அந்தத் திணைக்களத்தின் அண்மைக்கால செயல்பாடுகளாலும், அதனை எதிர்க்க வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் சதுர ஆவுடையார் கொண்ட சிவலிங்கத்தை உடைய ஒரேயொரு சிவாலயம் என்னும் பெருமையையும் 2,400 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைமையையும் கொண்டது எமது ஆலயம். அதன் பூசை மரபுகளும், வழிபாடுகளும் மிக இயல்பாக நடைபெற்று வரும் சூழலில் தொல்பொருளியல் திணைக்களத்தின் தலையீட்டினால் எமது மண்ணிலோ, இயல்பான இயங்கு நிலையிலுள்ள எமது ஆலயச் சூழலிலோ மதப்பதற்றம் மிகு சூழலொன்று ஏற்படுவதை நாமோ எமது மாவட்ட மக்களோ விரும்பவில்லை.

எனவே, இவ்விடயத்தில் உயரிய கரிசனைகொண்டு, தொல்பொருளியல் திணைக்களத்தின் இத்தகைய நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதாக வடக்கு - கிழக்கின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 2023.05.11ஆம் திகதி தாங்கள் வழங்கிய உறுதி மொழியை ஊடகங்கள் வாயிலாக அறிந்து கொண்டோம். அதற்கமைய எமது ஆலயத்தில் தொல்பொருளியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவுள்ள அளவீட்டுப் பணிகளையும் அதனோடு தொடர்புடைய அகழ்வுப் பணிகளையும் தங்களின் நேரடி தலையீட்டால் நிரந்தரமாகத் தடுத்து நிறுத்தி, எமது இருப்பையும் இயங்கு நிலையையும், ஆலயத்தின் புனிதத் தன்மையையும் உறுதிப்படுத்துவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றும் தெரிவித்தனர். (ஐ)

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்**

# தகவலை மறைத்தவரின் ஆட்சேபனைகள் நிராகரிப்பு!

*கொழும்பு, மே 16*


உயிர்த்த ஞாயிறு தினத்தன்று பயங்கரவாத தாக்குதல் நடத்தப்படும் என்ற தகவலை மறைத்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள தொழிலதிபர் முஹமட் இப்ராஹிம் மற்றும் அவரின் இரு மகன்களுக்கு எதிராக சட்ட மா அதிபர் தாக்கல் செய்த வழக்கை விசாரிக்க முடியாது என்று முன்வைக்கப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனையை கொழும்பு மேல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

சட்டமா அதிபரால் முன்வைக்கப்பட்ட குற்றப்பத்திரிகை சட்டபூர்வமாக செல்லுபடியாகாது எனத் தெரிவித்த குற்றஞ்சாட்டப்பட்ட தரப்பினர் பூர்வாங்க ஆட்சேபனையை சமர்ப்பித்துள்ளனர்.

இதன் காரணமாக, அதனை நிராகரித்து குற்றவாளிகளை விடுவிக்குமாறு ஆட்சேபனைகள் நீதிமன்றத்தில் கோரப்பட்டன.

இது தொடர்பில் நேற்று திங்கட்கிழமை தீர்ப்பை வழங்கிய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க, சட்டமா அதிபரால் முன்வைக்கப்பட்ட குற்றப்பத்திரிகையின் செல்லுபடியாகும் தன்மையை ஆராய தமது நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை எனவும் எனவே, ஆரம்ப ஆட்சேபனையை நிராகரிப்பதாகவும் தெரிவித்தார். இதயைடுத்து வழக்கின் முன் விசாரணை மாநாடு ஜூன் 6ஆம் திகதி இடம்பெறும் என நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மே - 16 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம் - வைகாசி 02
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : சூன்ய




**மேடம்**
குடும்பத்தினரை அனுசரித்து போங்கள். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் மோதல்கள் வரக்கூடும். நன்மை நடக்கும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். சிறப்பான நாள்.

**மிதுனம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர் நண்பர்களால் ஆதாயமுண்டு. வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். புகழ் கௌரவம் உயரும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். அவசர முடிவுகளை தவிர்ப்பது நல்லது. சக ஊழியர்கள் மதிப்பார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எதிலும் ஒருவித கவலைகள் வந்து செல்லும். வியாபாரத்தில் லாபம் மந்தமாக இருக்கும். வேலைச்சுமை அதிகரிக்கும். எதிர் பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**கன்னி**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. சில சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். மேலதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். மகிழ்ச்சியான நாள்.

**துலாம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. எதிர்பாராத சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தொட்டது துலங்கும் நாள்.

**விருட்சிகம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**தனுசு**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். மகளுக்கு நல்ல வரம் அமையும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். தடைகளை தாண்டி வெல்லும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் சில ரகசியங்களை தெரிந்து கொள்வீர்கள். உங்களை நம்பிமூத்த அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார்.

**கும்பம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவீர்கள். புதுமுடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் ஒப்பந்தம் கையெழுத்தாகும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் வாய்ப்புகளையெல்லாம் விட்டுவிட்டோமே என்று ஆதங்கப்படுவீர்கள். ஊழியர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

# ஸ்டாலின் தனது திருப்திக்காக கருத்துகளை வெளியிடுகின்றார்

## அமைச்சர் முருகன்

புதுச்சேரி, மே 16

திராவிட மண்ணில் பா. ஜ. க. வர முடியாது என்று தனது திருப்திக்காக ஸ்டாலின் சொல்லி வருகின்றார் என மத்திய இணை அமைச்சர் எல். முருகன் விமர்சித்துள்ளார்.

புதுச்சேரி சென்றுள்ள அமைச்சர் செய்தியாளர்களை நேற்று சந்தித்தபோது, "தமிழ் மண்ணான புதுச்சேரியில் பா. ஜ. கவின் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி இருந்து கொண்டிருக்கிறது. தேர்தலில் வெற்றி, தோல்வி என்பது சகஜமானது. தமிழகத்தில்கூட தி. மு. க. பலமுறை தூக்கி எறியப்பட்டது. எம். ஜி. ஆர் இருந்த போது தி. மு. க. வெற்றி பெறுவதே கடினமாக இருந்தது. கருணாநிதி ஒருவர் மட்டுமே வெற்றி பெற்றுக் கொண்டிருந்தார். ஆகவே, ஒரு தேர்தலை வைத்து மட்டுமே மற்ற விசயங்களை சொல்ல முடியாது.

தமிழகம், புதுச்சேரியில் பாஜக மிகப்பெரிய வளர்ச்சியை பெற்றுக்கொண்டிருக்கிறது. தமிழகத்தில் பா. ஜ. க. சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்து கொண்டிருக்கின்றோம். புதுச்சேரியில் பா. ஜ. கவின் தேசிய ஜனநாயக ஆட்சி நடக்கிறது. அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் உள்ளோம். எனவே, திராவிட மண்ணில் பா. ஜ. க. வரமுடியாது, பா. ஜ. க. துடைத்தெறியப்பட்டுள்ளது என்று ஸ்டாலின் கூறுவது அவருடைய கற்பனை. தனது திருப்திக்காக இதுபோன்று அவர் சொல்லி வருகின்றார். உண்மையில் இன்று பா. ஜ. கவுக்கு மிகப்பெரிய வரவேற்பு இருந்து கொண்டிருக்கிறது. கர்நாடக மாநிலத்தில் 2018இல் பா. ஜ. கவின் வாக்கு சதவீதம் எப்படி இருந்ததோ, அதே போன்ற வாக்கு சதவீதம் இப்போதும் உள்ளது." இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(ஐ)

# பாராளுமன்றத் தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளில் தி. மு. க.

சென்னை, மே 16

புதிய உறுப்பினர்கள் சேர்க்கை, தேர்தல் முன்னாயத்தப் பணிகள், நிர்வாகிகள் நியமனம் உள்ளிட்ட பணிகளில் சரிவர செயல்படாத மூன்று மாவட்ட செயலர்களுக்கு, முதல்வர் ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தி. மு. க.,வில் புதிதாக ஒரு கோடி உறுப்பினர்களை சேர்க்கும் பணியையும், பாராளுமன்றத் தேர்தலுக்கான கட்சி கண்காணிப்பு குழுவை அமைப்பது தொடர்பான பணிகளையும் கண்காணிக்க, 234 சட்ட சபை தொகுதிகளுக்கும் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை நேற்று முதல்வர் சந்தித்துப் பேசினார். பாராளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் ஓராண்டு தான் உள்ளது. தி. மு. க., கூட்டணி, 40 தொகுதிகளிலும் வரலாறு காணாத வகையில், அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டும். அதற்கு, நாம் கடுமையாக உழைத்தாக வேண்டும்.

மாவட்டச் செயலர்கள் அனைவரும், தங்களிடம் உதவி கேட்டு வரும் நிர்வாகிகளிடம் பொறுமையாக பேசுங்கள் அவர்களின் குறைகளை கேட்டு செய்து கொடுங்கள். கட்சி பணிகளைசெவ்வனே செய்துள்ள மாவட்டச் செயலர்களை பாராட்டுகிறேன்.

கருணாநிதி நூற்றாண்டு விழாவின்போது தி. மு. க. 2 கோடி உறுப்பினர்கள் என்ற இலக்கை அடைந்திருக்க வேண்டும் -என்றார்.

(ஐ)

# "பாராளுமன்ற தேர்தலில் கர்நாடகாவில் 26 தொகுதிகளை பா. ஜ. க. வெல்லும்"

சென்னை, மே 16

வரும் மக்களவைத் தேர்தலில், கர்நாடக மாநிலத்தில் 26 தொகுதிகளுக்கு மேல் பா. ஜ. க. கைப்பற்றும் என்று அந்தக் கட்சியின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை கூறினார்.

அவர் சென்னையில் செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது: கர்நாடக சட்டப் பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சிக்கு வாழ்த்துகள். அதேநேரத்தில், மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற காங்கிரஸ் கட்சி முயற்சிக்க வேண்டும்.

பிரதமர் மோடி மீது கர்நாடக மக்கள் கொண்டுள்ள அன்பு குறையவில்லை. அம்மாநிலத்தில் பாஜக கடந்து வந்த பாதை மிகவும் கடினமானது. கர்நாடகாவில் கடந்த 38 ஆண்டுகளாக, ஆளும் கட்சி மீண்டும் ஆட்சியைப் பிடித்ததில்லை. மேலும், கர்நாடகாவில் பாஜகவின் வாக்கு வங்கி குறையவில்லை.

வாழ்வில் வெற்றி பெறுவதை விட, தோல்வி அடையும்போது நிறைய அனுபவம் கிடைக்கும். கர்நாடக தேர்தலில் மிகப்பெரிய அனுபவம் எனக்குக் கிடைத்திருக்கிறது. இது தமிழகத்தில் பா. ஜ. கவை வளர்ச்சி பெறச் செய்ய உதவும். 2024 மக்களவைத் தேர்தலில் கர்நாடகாவில் 26 தொகுதிகளுக்கு மேல் பா. ஜ. க. வெற்றிபெறும்.

பா. ஜ. கவில் இளைஞர்கள் நிறைய பேர் போட்டியிட்டனர். எனினும், எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. தமிழக முதல்வருக்கு பா. ஜ. கவின் வளர்ச்சியைப் பார்த்து பயம் ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் தி. மு. க. ஆட்சியை தக்க வைத்துக் கொண்டது கிடையாது. அ. தி. மு. க. மட்டுமே தக்கவைத்துள்ளது. சித்தராமையா சிறந்த தலைவர். அதில் மாற்றுக் கருத்து இல்லை. அதேபோல, டி. கே. சிவகுமாரும் தகுதி வாய்ந்தவர். யார் முதல்வராக வந்தாலும் சரி, கர்நாடகா காங்கிரஸ் நல்ல ஆட்சியைக் கொடுக்க வேண்டும்.

ஆனால், தேர்தல் அறிக்கையில் கூறியதை போல தயவு செய்து மேகேதாட்டு அணையைக் கட்டி விடாதீர்கள். அப்படி கட்டினால், முதல் போராட்டம் பா. ஜ. க. சார்பில் நான் நடத்துவதாக இருக்கும். கர்நாடகாவில் அமையும் புதிய ஆட்சிக்கு தமிழக முதல்வர் வாழ்த்து தெரிவித்துள்ளார். அதில், மேகேதாட்டு வேண்டாம் என்று முதல்வர் குறிப்பிட்டு இருந்தாரா என்று பார்த்தேன். ஆனால், அது பற்றி முதல்வர் எதுவும் குறிப்பிட்டு இருக்கவில்லை - என்றார்.

(ஐ)

# "திருமாவளவன் பா. ஜ. க. கூட்டணிக்கு வரவேண்டும்"

கோவை, மே 16

சமூக நீதிக்கு எதிரான தி. மு. க. கூட்டணியில் இருந்து விலகி, பா. ஜ. க. கூட்டணிக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் வர வேண்டும் என, பா. ஜ. க. மகளிர் அணி தேசிய தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான வானதி சீனிவாசன் தெரிவித்தார்.

மேலும், கர்நாடக தேர்தலில் மக்கள் கொடுத்த தீர்ப்பை ஏற்கிறோம். ஆட்சி அமைக்க முடியாததற்கான காரணத்தை கட்சி ஆராயும். பாராளுமன்ற தேர்தலில் மக்கள் எதிர்பார்ப்பை பூரணமாக நிறைவேற்றும் வகையில் கர்நாடக தேர்தல் முடிவு எங்களை தயார்படுத்துகிறது. தோல்விக்கு குறிப்பிட்ட காரணம் என்று எதையும் சொல்ல முடியாது.

திராவிட நிலப்பரப்பு என்பதை வார்த்தை அலங்காரத்துக்கு தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் பயன்படுத்துகிறார். தேர்தலில் வெற்றி, தோல்வி என்பது சகஜம். தி. மு. க. எத்தனை முறை புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. இரட்டை இலக்கம் கூட இல்லாமல் தி. மு. க. சட்டப்பேரவை உறுப்பினர்கள் இருந்துள்ளனர். பா. ஜ. கவின் வழக்கமான வாக்கு சதவீதம் அப்படியே உள்ளது.

திருமாவளவன் தான் இருக்கும் கூட்டணியில் பட்டியலின மக்கள் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்காது என்பதை கடந்த 2 ஆண்டுகளாக பார்த்து வருகிறார். எனவே, திருமாவளவன் சமூக நீதிக்கு எதிரான தி. மு. க. கூட்டணியில் இருந்து விலகி பா. ஜ. க. கூட்டணிக்கு வர வேண்டும். வாரிசு அரசியல், குடும்ப அரசியல்தான் திராவிட மொடல் என தி. மு. கவினர் நிரூபிக்கின்றனர் - என்றார்.

# குமுதினிப் படுகொலையின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல்

## நெடுந்தீவில் நேற்று பலரும் பங்கேற்பு





யாழ்ப்பாணம், மே. 16

**குமுதினி படுகொலையின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நெடுந்தீவில் இடம்பெற்றது.**

**குமுதினி படகில் படுகொலை செய்யப்பட்ட 36 பேரின் நினைவாக நெடுந்தீவு இறங்கு துறையிலுள்ள நினைவாலய வளாகத்தில் நினைவேந்தல் இடபெற்றது.**

காலை 8.15 மணிக்கு நெடுந்தீவு மாவிலி துறைமுகத்தில் அமைந்துள்ள புனித சவேரியார் ஆலயத்தில் ஆத்ம சாந்தி வேண்டி திருப்பலியும், சம நேரத்தில் மாவிலி துறைமுகத்தில் அமைந்துள்ள வீரபத்திர பிள்ளையார் ஆலயத்தில் ஆத்மா சாந்தி வேண்டி சிறப்பு பூசையும் இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு குமுதினிப் படுகொலை நினைவேந்தல் குழுமத்தின் நெடுந்தீவு பிரதேச தலைவர் வி.ருத்திரன் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நினைவுத்தூபிக்கான நினைவுச் சுடர் ஏற்றல் மற்றும் மலர் அஞ்சலி செலுத்துதல் ஆகிய நிகழ்வுகளுடன் பசுந்தீவு ருத்திரனின் குருதியின் குமுறல்கள் என்ற கவிதை நூலும் வெளியிடப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுகளில் நெடுந்தீவு பகுதி மதத் தலைவர்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

1985ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி நெடுந்தீவு துறைமுகத்திலிருந்து 64 பயணிகளுடன் பயணித்த குமுதினிப் படகு இலங்கைக் கடற்படையால் நடுக்கடலில் வழிமறிக்கப்பட்டு குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என 36 பேர் வெட்டி படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேர்தல் இடாப்பு திருத்தும் நடவடிக்கைகள் ஆரம்பம்

கொழும்பு, மே. 16

இவ்வருடத்துக்கான தேர்தல் இடாப்பு திருத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கிணங்க கிராம சேவை அதிகாரிகள் வீடு வீடாக சென்று வாக்காளர்கள் தொடர்பான தரவுகளை திரட்டும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாட்டின் நிலவிய கொரோனா வைரஸ் பரவல் சூழ்நிலை மற்றும் அரசியல் நெருக்கடி நிலை காரணமாக கடந்த இரண்டு வருடங்களிலும் கிராம சேவை அதிகாரிகள் வீடு வீடாகச் சென்று வாக்காளர்களின் தகவல்களைத் திரட்டும் நடவடிக்கைகள் இடம்பெறவில்லை என்றும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் இம்முறை கிராம சேவை அதிகாரிகள் வீடு வீடாகச் சென்று தரவுகளை திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த ஆணைக்குழு கூறியுள்ளது. (அ)

# டொலரின் சரிவின் காரணமாக இறக்குமதி கணிசமாக குறைவு

## தம்மிக பெரேரா கூறுகிறார்

கொழும்பு, மே. 16

டொலரின் சரிவின் காரணமாக, இலங்கையின் இறக்குமதிகள் கணிசமான அளவு குறைந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை-மித்தெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனை கூறினார்.

இதேவேளை இலங்கையில் நிலவும் வரி நெருக்கடிக்கு டொலர் பற்றாக்குறையே காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் டொலர்களை கொண்டுவருவதற்கான நிலையான பாதையை இலங்கை இன்னும் உருவாக்கவில்லை எனவும் இதன் மூலம் சுங்க வரி மற்றும் ஏனைய வரிகள் மூலம் ஈட்டப்படும் வருமானம் நேரடியாக பாதிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் சுங்க வரிகள் மற்றும் வரிகளில் இருந்து இழந்த பணத்தை சம்பாதிப்பதற்காக, மற்ற வரிகள் அதிகரிக்கப்படுகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# சிறை அலுவலரை தாக்கி, மண்டியிடவைத்து வீடியோ எடுத்தவர்களைத் தேடும் பொலிஸ்!

கொழும்பு, மே. 16

கொழும்பு, புதிய மகசின் சிறைச்சாலையின் அதிகாரி ஒருவரின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்த இனந்தெரியாத மூவர் அவரை மண்டியிடச் செய்து அச்சுறுத்தி, கொலை மிரட்டல் விடுத்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களம் உள்ளக விசாரணையை ஆரம்பித்துள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

புதிய மகசின் சிறைச்சாலையின் ஒழுக்கவியல் திணைக்களத்தில் இளைஞர் பிரிவுக்கான கண்காணிப்பாளராக கடமையாற்றும் குறித்த அதிகாரியின் மினுவாங்கொடை பகுதியில் அமைந்துள்ள வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த மூவரால் இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

12ஆம் திகதி அதிகாலை 4.30 மணியளவில் வீட்டு கதவை தட்டும் சத்தம் கேட்டு, தாயார் கதவை திறந்துள்ளார். இளம் சிறையதிகாரி, சகோதரி, தாயார் அந்த வீட்டிலிருந்தனர். மகனின் நண்பர் யாரோ வந்துள்ளதாக நினைத்து கதவை திறந்ததாகவும், பாதி கதவை திறந்தபோது, கதவை பலவந்தமாக தள்ளிக் கொண்டு அவர்கள் உள்நுழைந்ததாக தாயார் தெரிவித்தார்.

அவர்கள் தனது, மகளின் தொலைபேசி பறித்தனர் என்றார்.

அறையில் தூங்கிக்கொண்டிருந்த மகன் சத்தம் கேட்டு வெளியில் வந்தபோது, அவரை தாக்கி, அறைக்குள் இழுத்துச் சென்றனர். கையை பின்னால் கட்டி, முழங்காலில் மண்டியிட்டு உட்கார வைத்து தாக்கினர். மகனின் தலையில் துப்பாக்கியை வைத்து மிரட்டினர் என்று தாய் கூறினார்.

மகனை காப்பாற்ற முயன்றபோது, துப்பாக்கியால் தனது தலையில் தாக்கியதாகவும், தலையில் வீக்கம் ஏற்பட்டதாகவும் தாயார் குறிப்பிட்டார்.

மகனை ஏன் தாக்குகிறீர்கள் என தான் வினவியபோது, அவர் சிறையில் ஹீரோவாக முயல்கிறார் என அந்த கும்பல் பதிலளித்தாகவும் தாயார் தெரிவித்தார்.

இதன்போது அவர்களுள் ஒருவர் "நீ சிறைச்சாலைக்கு செல்கிறாயா? அங்கு இருப்பவர்களை திருத்துவதற்கு முயற்சிக்கிறாயா? உன்னால் அவற்றை செய்யமுடியாது. சிறைச்சாலைக்குள் போதைப் பொருட்களைக் கொண்டு வருவதை உன்னால் நிறுத்த முடியாது.

இவற்றில் தலையிடுவதை நிறுத்திவிட்டு வேறு வேலையை பார்த்து கொள். இதனை பொலிஸில் கூறினால் உன்னை நான் பார்த்துக்கொள்கிறேன்" என அச்சுறுத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவரை மண்டியிட வைத்து தாக்குவதை ஒருவர் வீடியோ, புகைப்படம் எடுத்துள்ளார்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் மினுவாங்கொடை பொலிஸில் முறைப்பாடு செய்த அதிகாரி மினுவாங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக கம்பஹா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களம் உள்ளக விசாரணையை ஆரம்பித்துள்ளதுடன், அரச புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தாக்குதலுக்கு உள்ளான அதிகாரி கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலைக்குள் போதைப் பொருள் கொண்டுவரப்படுவதைத் தடுப்பதற்காக கடந்த காலங்களில் பல வெற்றிகரமான செயற்பாடுகளை மேற்கொண்டார் என தெரியவந்துள்ளது. (அ)

# இடரால் பாதிக்கப்பட்ட மக்களை உடனடியாக மீட்பதற்கு ஏற்பாடு

கொழும்பு, மே. 16

அனர்த்த நிலைமைகள் ஏற்படக்கூடிய பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களை உடனடியாக மீட்பதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி காலி, மாத்தறை, இரத்தினபுரி உள்ளிட்ட பகுதிகளில் முப்படைகள், பொலிஸ் மற்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையங்கள் தயார் நிலையில் உள்ளதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

மேலும் மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் உள்ள மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தி அதற்குரிய நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுமாறும் சாகல ரத்நாயக்க அறிவுறுத்தல் வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மாட்டு திருடர்களின் படங்கள் இனி சமூகவலைத்தளங்களில்

## விவசாய அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, மே. 16

கறவை மாடுகளைத் திருடும் நபர்களைக் கைது செய்து அவர்களின் புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சர் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நாட்களில் மாடு திருட்டுகள் அதிகரித்து வருவதாக விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளால் முறைப்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில் அமைச்சர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

நாளொன்றுக்கு சுமார் 20 லீற்றர் பால் வழங்கும் கறவை மாடுகள் திருடப்படுவதாகவும், வாரத்திற்கு சுமார் 35 மாடுகள் ஒரு மாவட்டத்தில் இருந்து திருடப்படுவதாகவும் விவசாய அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதன்படி, கறவை மாடுகளைத் திருடி கைது செய்யப்படும் நபர்களின் புகைப்படங்களைச் சமூக வலைத்தளங்கள் ஊடாக வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாரிடம் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# போராட்டங்களால் மீண்டும் நாட்டை சீர்குலைக்க இடமளிக்கப்படமாட்டாது

## அமைச்சர் பிரசன்ன திட்டவட்டம்



கொழும்பு, மே. 16

நாட்டில் இடம்பெற்று வரும் போராட்டங்களால் நாட்டை மீண்டும் சீர்குலைக்க இடமளிக்கப்படமாட்டாது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்தினார்.

அரசாங்கத்தை கவிழ்க்க மக்களுக்கு உரிமை உண்டு. ஆனால் அரசை கவிழ்க்க யாருக்கும் உரிமை இல்லை என்றும் இது ஒரு பயங்கரவாதச் செயல் என்றும் அமைச்சர் கூறினார்.

காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் கலந்துகொண்ட நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைக் குறிப்பிட்டார்.

குறித்த கலந்துரையாடல் நேற்று காணி அபிவிருத்தி கூட்டுத்தாபன கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இங்கு, நிறுவனத்தின் தற்போதைய நிலை மற்றும் எதிர்காலப் பணிகள் குறித்து அதிகாரிகளுடன் அமைச்சர் கலந்துரையாடினார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அங்கு மேலும் தெரிவிக்கையில்-

நான் மாகாண சபையின் முதலமைச்சராகவும் இன்று அமைச்சரவை அமைச்சராகவும் செயற்படுகின்றேன். எனக்கு கீழ் உள்ள நிறுவனங்களுக்கு நான் செல்வதில்லை. அங்கு சென்று நான் செல்வாக்கு செலுத்துவதில்லை. அந்த நிறுவனங்கள் சுதந்திரமாக செல்ல வேண்டும் என்ற நிலைப்பாட்டை நான் எப்போதும் நிலைநிறுத்த முயற்சிக்கிறேன். ஒவ்வொரு திங்கட்கிழமையும் பொதுமக்கள் தினத்தை நடத்துகிறோம். பொதுமக்கள் தினத்தில் வரும் முறைப்பாடுகள் குறித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அருகில் வைத்து, பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படுகிறது.

இன்று அரசு நிறுவனங்களில் நடக்கக்கூடாதவைகள் நடக்கின்றன. அவை முடிந்தவரை குறைக்கப்பட வேண்டும். பந்தை வேறொருவருக்கு அனுப்புவது சரியில்லை. கார் கொடுத்தால், சம்பளம் வாங்கினால், அலவன்ஸ் கிடைத்தால் செலவழிக்கப்படும் பணம் மக்கள் பணம். எனவே, கடன் வாங்காமல், கிடைக்கும் பணத்திற்காக உழைக்கவேண்டும். ஒரு நிறுவனத்தில் நன்றாக வேலை செய்பவரை எப்போதும் திட்டுவார்கள். இவற்றையெல்லாம் நாம் சமாளிக்கவேண்டும்.

புதிய வழியில் சிந்தித்து, புதிய வழியில் செயல்பட்டால், எங்களால் நீண்ட பயணம் செல்ல முடியும். நாட்டின் தற்போதைய நிலையை என்னை விட அரசாங்க அதிகாரிகளாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள். பாரம்பரிய நிறுவனமாக முன்னேறாமல், புதிய வழியில் சிந்தித்து வருமானம் ஈட்டவேண்டும்.

அந்தப் பயணத்தில், நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களின் வேலையைப் பாதுகாப்பதுதான் முதல் விஷயம். அதுதான் இப்போது நமக்கு இருக்கும் மிகப்பெரிய சவால். எனக்கு கீழ் உள்ள பல அரசு நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. நிறுவனத் தலைவர்கள் தங்கள் சொந்த வருமானத்தை உருவாக்குவதன் மூலம் நிறுவன ஊழியர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான பொறுப்பு உள்ளது. சிறிது காலம் கழித்து இது சாதாரணமாகிவிடும். இது சவாலான காலமாகும்-என்றார்.

(அ)

# நில, கலாசார ஆக்கிரமிப்புக்களை முடிவுக்கு கொண்டு வரவேண்டும்

## வலியுறுத்துகிறது தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி

யாழ்ப்பாணம், மே. 16

**வடக்கு-கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் 70 ஆண்டுகளுக்கு மேலாக தொடரும் நில கலாசார ஆக்கிரமிப்புக்கள் முடிவுக்கு கொண்டு வரப்படவேண்டும் என தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சிறிதரன் சுகு கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

பாலஸ்தீன மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் நிகழ்வது போன்று இங்கும் காலம் காலமாக இது நிகழ்த்தப்பட்டு கொண்டிருக்கிறது.

13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழான நிலத்தின் மீதான அதிகாரம் கிழக்கு வடக்கில் முழுமைப்ப டுத்தப்படவேண்டும்.

பாரம்பரிய பிரதேசங்களில் தமிழ்,முஸ்லிம் மக்களை சிறுபான்மையினராக்க முயல்வது பிரிவினையை பேரினவாதம் ஊக்கப்படுத்துவதாகவே கருதவேண்டும். ஆக்கிரமிப்புகள் மூலம் சமூக பன்மைத்துவத்தை உருவாக்க முடியாது.

திருமலை இணைந்த வடக்கு -கிழக்கின் தலைநகரமாக இருந்தது. இப்போது அதன் தமிழ் அடையாளங்கள் பாரியளவில் சிதைக்கப்பட்டுள்ளன.



வடக்கு , கிழக்கு இடையேயான கரையோர பண்பாட்டு வாழ்வாதார நில தொடர்ச்சியை துண்டிப்பதற்கான வேலைகள் பல தசாப்தங்களாக தொடர்கின்றன.

இந்த பேரினவாத, கலாசார, மதவாத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் என்றென்றைக்கும் சமூகங்களைப் பிளவுபடுத்துவதாகவே அமைகின்றன.

இந்த பிளவும் பிரிவினையும் இலங்கை சமூக பொருளாதார தளங்களில் நிலவும் பாரிய நெருக்கடியை தீவிரமடையச் செய்து மீள முடியாத இடத்திற்கு இந்த நாட்டை தள்ளிச் செல்லும்.

இலங்கை தனது முகத்தை ஒற்றை கலாசாரம், ஆக்கிரமிப்பு என்பதற்கு பதிலாக பன்மைத்துவம் -சமத்துவம் -சகோதரத்துவம் -ஜனநாயகமாக மாற்றி கொள்ளாமல் இலங்கை வெற்றிகரமான நாடாக மாற முடியாது.

13ஆவது திருத்தத்தை- மாகாண சபை முறைமையை முழுமையாக அமுல்படுத்துவதன் மூலம் குறைந்தபட்ச நில கலாசார உரிமைகள் உறுதிப்படுத்தப்படவேண்டும்-என்றுள்ளது. (அ)

# நியூயோர்க் முள்ளிவாய்க்கால் நினைவில் உரையாற்றும் ஐ.நா முன்னாள் அதிகாரி!



கொழும்பு, மே. 16

இலங்கையில் போரின்போது பணியாற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் அதிகாரி கோர்டன் வைஸ் 9ஆவது ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குறித்து உரையாற்றவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர் ஆயுதப் போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கையில் ஐக்கிய நாடுகளின் பேச்சாளராக பணியாற்றினார்.

இந்நிலையில் எதிர்வரும் வியாழக்கிழமை நியூயோர்க்கில் அவர் தமது நினைவேந்தல் உரையை நிகழ்த்துவார் என்று நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அறிவித்துள்ளது.

(அ)

# அரசின் பொது உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும்

கொழும்பு, மே. 16

அரசாங்கத்தினால் வழங்கப்படும் பொது உதவிகள் குறைக்கப்படாமல் தொடர்ந்தும் வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

இதன்படி, குறிப்பிட்ட சிலருக்கு அரசினால் வழங்கப்படும் சிறுநீரக உதவி, முதியோர் உதவி உள்ளிட்ட பொது உதவிகள் குறைக்கப்படாமல் வழங்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

நட்டஈட்டுப் பலன்களை வழங்குவது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியின் இரண்டாவது உப ஆவணத்தில் அது குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

தெஹியோவிட்ட பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(அ)

# 40 வருடங்களுக்கு பின் யாழில் இருந்து திருக்கேதீஸ்வரத்துக்கு கொடிச்சீலை!

யாழ்ப்பாணம், மே. 16

வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழாவை முன்னிட்டு, கொடிச்சீலை உபயகாரர்களுக்கான காளாஞ்சி வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளை தொடர்ந்து திருநெல்வேலி வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்தில் உள்ள சிவபெருமானுக்கு நேற்று காலை விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் செங்குந்த மரபுடையவர்களுக்கான காளாஞ்சி எடுத் துச்செல்லப்பட்டு திருநெல் வேலி கென்னடி வீதியில் உள்ள சண்முகநா தன் கபிலன் குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டு பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும் வழங் கப்பட்டது.

இந் நிகழ்வில் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபையைச் சேர்ந்த உறுப்பினர்கள் பங்குபற்றியிருந்தனர்.



திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் மே 24ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

1982ஆம் ஆண்டிற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்தே திருக்கேதீஸ்வரத்திற்கு கொடிச்சீலை வழங்கப்பட்டநிலையில் யுத்த காலத்தில் அந்த முறை கைவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த வருடம் திருக்கேதீஸ்வரத்திற்கு கும்பாபிஷேகம் நடைபெற்ற நிலையில் 40 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் திருக்கேதீச்சர ஆலயத்திற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பொதுக் கூட்டமைப்புக்கு தயாராகும் சஜித் தரப்பு!

## அதற்கான நகர்வுகள் முன்னெடுப்பு

கொழும்பு, மே. 16

**அரசியல் மேடையில் பொதுக் கூட்டமைப்பு ஒன்றுக்கு ஐக்கிய மக்கள் சக்தி தமது நகர்வுகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அரசியலமைப்புத் திருத்தங்களுக்குப் பின்னர் சாத்தியமான ஜனாதிபதித் தேர்தலுக்கு இந்த ஆண்டு ஒரு வலுவான வாய்ப்பாக இருப்பதால், இந்த செயற்பாடு முன்னெடுக்கப்படுவதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாய்ப்புகளும் அதன் பின்னர் நாடாளுமன்ற தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் என்ற அடிப்படையில் தேர்தல்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகளும் உள்ளதாக அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளுக்கு இடையே ஒரு ஒருங்கிணைந்த ஏற்பாடு தேவை என்பது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் சிந்தனையாக உள்ளது.

இந்தநிலையில் ஒரு புதிய அரசியல் தளத்தை உருவாக்குவதற்கு ஒன்றிணைந்து செயல்படமற்ற எதிர்க்கட்சிகளுடன் தாங்கள் விவாதித்து வருதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இதில் விருப்பமுள்ள அனைத்து தரப்பினரும் வரவேற்கப்படுகிறார்கள் என்று சுட்டிக்காட்டியுள்ள மத்தும பண்டார மிக விரைவில் விவாதங்கள் தொடரவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் கட்சிகளுக்கு இடையில் பாராளுமன்ற கட்டடத்தில் இது தொடர்பான விவாதங்கள் இடம்பெறவுள்ளதாகவும் அவர் கூறினார்.

அண்மையில் இது தொடர்பில் இடம்பெற்ற சந்திப்பில் எதிர்க்கட்சிகளின் முக்கியஸ்தர்கள் பலர் பங்கேற்றிருந்தனர்.

எனினும், ஜேவிபி குறித்த சந்திப்புகளில் பங்கேற்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (அ)

# பஸ்நாயக்க நிலமே தெரிவுக்கு கையூட்டு வழங்கப்பட்டுள்ளதா?

கொழும்பு, மே. 16

கண்டி தலதா மாளிகைக்கு உட்பட்ட கதிர்காமம் தேவாலயத்தின் தலைவரான பஸ்நாயக்க நிலமேவை தெரிவு செய்வதற்காக வாக்களித்த வாக்காளர்கள் சிலருக்கு கையூட்டு வழங்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன

குறிப்பிட்ட வேட்பாளருக்கு வாக்களிப்பதற்காக, இலஞ்சம் வழங்கப்பட்டதாக எழுந்த முறைப்பாட்டையடுத்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இதன்படி சிரேஷ்ட பௌத்த பிக்குகள், கண்டியில் உள்ள பல தேவாலயங்களின் பஸ்நாயக்க நிலமேக்கள் மற்றும் அரச அதிகாரிகள் உட்பட வாக்காளர்கள், வாக்குமூலங்களை வழங்குவதற்காக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிட்ட கதிர்காமம் ஆலயத்தின் முன்னாள் பஸ்நாயக்க நிலமே ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜனக ரத்நாயக்க- எரிசக்தி அமைச்சு மோதல்நிலை மிக உச்சக் கட்டத்தில்!

கொழும்பு, மே. 16

இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கும், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுக்கும் இடையில் நிலவும் மோதல்கள் அடுத்த வாரத்தில் முக்கியக் கட்டத்தை நோக்கி நகரவுள்ளன எனக் கூறப்படுகின்றது.

மின்சாரக் கட்டண உயர்வுக்கு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க எதிர்ப்பு வெளியிட்டது முதல், இந்த மோதல் ஆரம்பித்தது.

இந்தநிலையில், ஜனக ரத்நாயக்கவை, ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் இருந்து நீக்கக் கோரி, பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் தீர்மானம் முன்வைக்கப்பட்டது.

இது எதிர்வரும் 24ஆம் திகதியன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரங்களைக் குறைப்பதற்கான பிறநகர்வுகளும் நடந்து வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக குறுகிய,நடுத்தர மற்றும் நீண்டகால தேசிய கொள்கைகளை வகுப்பதில் முன்னுரிமைகளை கண்டறிவதற்கான நாமல் ராஜபக்ஷ தலைமையிலான உபகுழுவின் முதலாவது இடைக்கால அறிக்கை பாராளுமன்றில் கையளிக்கப்பட்டுள்ளது.

அதில் மின்சாரக்கட்டணத்தை அதிகரிக்க எடுத்த முடிவின்போது, பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு இருந்த அதிகாரம் காரணமாக சில சிக்கல்கள் எழுந்தன என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு, பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும் என்ற பரிந்துரை அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# தரமற்ற ஒரு இலட்சம் மயக்க மருந்து குப்பிகள் மீளப் பெறப்பட்டுள்ளன!

கொழும்பு, மே. 16

தரமற்ற மயக்க மருந்துகளை உள்ளடக்கிய 100,000 குப்பிகள். பயன்பாட்டிலிருந்து திரும்பப் பெறப்பட்டுள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்கள் சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உரிய மருந்துகளை பயன்படுத்தும்போது நோயாளர்களுக்கு ஏற்படும் சிக்கல்களை கருத்திற்கொண்டு அவை பயன்பாட்டிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக அதன் தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இந்த மருந்து இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட மருந்து அல்ல என்பதை தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தற்போது உறுதிப்படுத்தியுள்ளதாகவும், அவ்வாறு அனுமதியின்றி நோயாளிகளுக்கு இத்தகைய மருந்தை வழங்குவது கேள்விக் குறியாக உள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த சம்பவம் உட்பட மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்ததில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் வைத்தியர் சமல் சஞ்சீவ குறிப்பிட்டார்.

# விவசாய நடவடிக்கையில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு புதிய கடன் திட்டம்!

கொழும்பு, மே. 16

வேலையற்ற இளைஞர்கள், விவசாய நடவடிக்கைகளுக்காக மானிய வட்டி வீதத்துடன் கடன்களை பெற்றுக்கொள்ளும் விசேட வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, வேலையில்லாத் திண்டாட்டம் காரணமாக அரச வங்கிகளில் கடன் பெற முடியாத விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு இந்த நிவாரணம் வழங்கப்படும் என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இளைஞர்களிடையே இதுபோன்ற ஆர்வங்களை மேலும் ஊக்குவிக்கும் முயற்சியாகவும், ஏற்கனவே இதுபோன்ற செயல்களில் ஆர்வமுள்ளவர்கள் சொந்தமாக பண்ணை அல்லது கால்நடை வளர்ப்பை அனுமதிக்கும் முயற்சியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

அதற்கமைய, வேலைத்திட்டத்தின் முதல் கட்டத்தினது ஒரு பகுதியாக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 50 இளைஞர்களுக்கு, 6.5 என்ற வட்டி வீதத்தில் 10 இலட்சம் மற்றும் 20 இலட்சம் ரூபாவை வழங்குவதுடன், அரச வங்கிகளில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அதற்கேற்ப நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# தன்பாலினச் சேர்க்கை தொடர்பான சட்டத்தினால் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவோர் தப்பிக்கக்கூடும்!

கொழும்பு, மே. 16

தன்பாலின சேர்க்கை தொடர்பில் கொண்டுவரப்படும் சட்டமானது சிறுவர் துஷ்பிரயோகம் செய்பவர்கள் சட்டத்தில் இருந்து தப்பிப்பதற்கான வாய்ப்பை உருவாக்கும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளர் நாயகம் கலாநிதி வசந்த பண்டார தெரிவித்தார்.

மக்கள் நெருக்கடியில் இருக்கும் நேரத்தில் பல சட்டமூலங்களை கொண்டு வந்து நிறைவேற்ற அரசு முயற்சித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை சட்டத்தில் தன்பாலினச்சேர்க்கையில் ஈடுபடுவது குற்றமாக இருந்த போதிலும், கடந்த காலங்களில் நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் தண்டனை வழங்குவதை பொலிஸார் தவிர்த்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

தன்பாலினச்சேர்க்கை தொடர்பில் உலகின் ஏனைய நாடுகளில் உள்ள மனிதாபிமானமற்ற தண்டனைகள் இந்நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை எனவும் அரசியலமைப்பின் 365வது சரத்தில் சிறு திருத்தம் செய்வதன் மூலம் அதனை மாற்ற முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.




எவ்வாறாயினும், இந்த உத்தேச சட்டத்தின் மூலம் அரசியலமைப்பின் 365 (ஆ) சரத்து முற்றாக நீக்கப்பட்டு, துஷ்பிரயோகத்தை ஊக்குவிக்கும் உலகின் ஒரேயொரு நாடாக இலங்கையை மாற்றும் என்றும் அவர் கூறினார்.

சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்யும் எவரும் இந்த சட்டத்தின் மூலம் சட்டத்திலிருந்து தப்பிக்க முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# மக்களின் வாழ்க்கைச் செலவை இவ்வருடம் குறைக்க நடவடிக்கை

கொழும்பு, மே. 16

இந்த ஆண்டு நிறைவடைவதற்கு முன்னதாக மக்களின் வாழ்க்கைச் செலவை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

பல்வேறு வழிகளில் நிவாரணங்களை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- மின்சாரக் கட்டணங்கள் எதிர்வரும் இரண்டு மாதங்களில் குறைக்கப்படும்.

எரிபொருள் விலை இரண்டு கட்டணங்களாக குறைக்கப்படும். எரிவாயு விலைகளும் மேலும் குறைவடையும்.



அதேவேளை குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கு மாதாந்தம் கொடுப்பனவு வழங்கப்படும்.

பல்வேறு பிரிவுகளின் அடிப்படையில் ஒரு குடும்பத்துக்கு 3000, 5000, 8000 மற்றும் 15000 ரூபா என்ற அடிப்படையில் வங்கிக் கணக்குகளில் பணம் வைப்பிலிடப்படும்-என்றார். (அ)

# டி.கே.சிவகுமார், சித்தராமையா: கர்நாடக முதல்வராக காங்கிரஸ் தலைமை யாரை தேர்ந்தெடுக்கும்?

அபிநவ் கோயல்



கர்நாடாகாவில் வாக்காளர்கள் காங்கிரஸ் கட்சிக்கு தனிப்பெரும்பான்மையை அளித்துள்ளனர். தற்போது காங்கிரஸ் முழு பெரும்பான்மையுடன் மாநிலத்தில் ஆட்சி அமைக்க உள்ளது.

முடிவுகள் வந்துவிட்டபோதிலும் முதல்வர் நாற்காலியில் யார் அமர்வார்கள் என்ற ஒரு கேள்வி இப்போது எல்லோர் மனதிலும் இருந்து கொண்டே இருக்கிறது. இந்தப் பந்தயத்தில் மூன்று பெயர்கள் அடிபடுகின்றன.

அவர்கள் முன்னாள் முதல்வர் சித்தராமையா, காங்கிரஸ் கட்சியின் மாநில தலைவர் டி.கே.சிவகுமார் மற்றும் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன் கார்கே.

வெற்றிக்குப் பிறகு காங்கிரஸ் மாநில தலைவர் டி.கே. சிவகுமார் மற்றும் முன்னாள் முதல்வர் சித்தராமையா செய்தியாளர்கள் முன் வந்து, உணர்ச்சிவசப்பட்டுப்



பேசினர். முதல்வர் பதவி தொடர்பாக கர்நாடகாவில் இரு தலைவர்களின் ஆதரவாளர்களுக்கும் இடையே போஸ்டர் போர் ஏற்கெனவே தொடங்கிவிட்டது.

சித்தராமையா ஒருமுறை கர்நாடக முதலமைச்சராக இருந்தவர். டி.கே.சிவகுமாரின் இந்த ஆசை நீண்ட நாட்களாக நிறைவேறாமல் உள்ளது. இந்த முறை அதை நிறைவேற்றிக் கொள்ள அவர் விரும்புகிறார்.

கர்நாடக முதல்வராக வரப்போவது யார்? இந்தக் கேள்விக்கான பதிலைக் கண்டறிய, பல ஆண்டுகளாக கர்நாடக அரசியலை உன்னிப்பாகக் கவனித்து செய்திகளை அளித்து வரும் மூத்த செய்தியாளர்களிடம் பேசினோம்.

### டி கே சிவகுமார்

முதலில் டி.கே.சிவகுமார் பற்றிப் பேசுவோம்.

2020ஆம் ஆண்டில், கர்நாடக மாநில தலைவர் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. மாநிலத்தில் காங்கிரஸ் மிக மோசமான நிலைமையில் இருந்த நேரம் அது. சித்தராமையா அமைச்சரவையில் இருந்த பல அமைச்சர்கள்கூட தேர்தலில் தோல்வியைத் தழுவினர்.

டிகே சிவக்குமார் காங்கிரஸ் கட்சியின் பழைய விசுவாசி. அவர் மாநிலத்தில் வொக்கலிகா சமூகத்தின் மிக முக்கியமான தலைவர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார்.

1989ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு காங்கிரஸை விட்டு அவர் வேறு எங்கும் செல்லவில்லை.

கனகபுரா தொகுதியில் எட்டாவது முறையாக அவர் வெற்றி பெற்றுள்ளார்.

2019ஆம் ஆண்டில் பணமோசடி மற்றும் வரி ஏய்ப்பு குற்றச்சாட்டின் பேரில் டெல்லியின் திகார் சிறையில் அவர் சுமார் இரண்டு மாதங்கள் கழிக்க வேண்டியிருந்தது.

டி.கே.சிவகுமார் முதல்வராகும் வாய்ப்பு குறித்துப் பேசிய மூத்த செய்தியாளர் எம்.கே.பாஸ்கர் ராவ், அந்த வாய்ப்பு 60-40 என்ற விகிதத்தில் உள்ளது என்றார்.

“இந்த 60 சதவிகித ஆதரவு ஹைகமாண்டின் ஆதரவு. காங்கிரஸ் தலைமையில், கார்கே, ராகுல் காந்தி மற்றும் சோனியா காந்தி ஆகியோர் அவரை விரும்புகிறார்கள். மேலும் அவரது ஆதரவிலும் காணப்படுகிறார்கள். அவர் கட்சித் தலைவராக ஆன பிறகு இரவும் பகலும் கடினமாக உழைத்தார்,” என்று அவர் கூறினார்.

“இக்கட்டான காலங்களில் அடிமட்டத் தொண்டர்களில் இருந்து உயர் தலைமை வரை காங்கிரஸில் நம்பிக்கையை வளர்க்கும் பணியை அவர் செய்துள்ளார்.”

காங்கிரஸ் மேலிடத்துடன் அவருடைய நெருக்கம் பற்றி மூத்த செய்தியாளர் ஹேமந்த் அத்ரியும் பேசுகிறார்.

“ராஜஸ்தானில் மாநில தலைவர் சச்சின் பைலட் தலைமையில் தேர்தல் நடந்தது. ஆனால் ஆட்சி அமைக்கும் நிலை வந்தவுடன் அஷோக் கேலாட்டுக்கு முதல்வர் நாற்காலி வழங்கப்பட்டது. கர்நாடகாவிலும் இது போன்ற ஏதாவது நடக்கலாம்,” என்று ஹேமந்த் அத்ரி கூறுகிறார்.

“கர்நாடகாவில் தேர்தல் பிரசாரத்தை டி.கே.சிவகுமார் முன்னின்று நடத்தினார் என்று கூறலாம். நிதியளித்ததுடன் கூடவே நீண்ட நாட்களாக உழைத்தார். ஆனால் 2024க்கு முன் எந்த ரிஸ்கையும் எடுக்க காங்கிரஸ் விரும்பவில்லை. ஏனென்றால் முன்பு ஆபரேஷன் லோட்டஸ், ஜே.டி.எஸ் மற்றும் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களை உடைத்துவிட்டது. எனவே இதுபோன்ற சூழ்நிலையைத் தவிர்க்க



அவருக்கு வாய்ப்பு கிடைப்பது கடினம்.”

கர்நாடகாவின் மக்கள் தீர்ப்பை மக்களவை இடங்களாக மாற்ற காங்கிரஸ் கட்சி விரும்புகிறது. எனவே மாநிலத் தலைமைக்கு இடையே சண்டையை ஏற்படுத்தும் எந்த நடவடிக்கையையும் அது எடுக்காது என்று அவர் கூறினார்.

சிவகுமார் மீது அமுலாக்கத்துறையின் வழக்கு இருக்கிறது. இது அவரது வாய்ப்பை பலவீனப்படுத்துகிறது என்று ஹேமந்த் அத்ரி குறிப்பிட்டார். அவர் மிகவும் திறமைசாலி மற்றும் போராடும் ஆற்றல் கொண்டவர் என்பதால் அவர் முதல்வர் ஆவதை பாஜக ஒருபோதும் விரும்பாது.

### சித்தராமையா

கர்நாடகாவில் காங்கிரஸ் தலைவர் சித்தராமையா மீண்டும் முதல்வர் பதவிக்கு வலுவான போட்டியாளராகக் கருதப்படுகிறார்.

1983ஆம் ஆண்டு முதல்முறையாக கர்நாடக சட்டப் பேரவைக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1994இல் ஜனதா தளம் ஆட்சியில் இருந்தபோது கர்நாடகாவின் துணை முதல்வரானார். எச்.டி.தேவே கௌடாவுடன் ஏற்பட்ட மோதலுக்குப் பிறகு சமய சார்பற்ற ஜனதா தளத்தில் இருந்து விலகி 2008 இல் காங்கிரஸில் இணைந்தார்.

2013 முதல் 2018 வரை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்துள்ளார். இதுவரை 12 தேர்தல்களில் போட்டியிட்டுள்ள அவர் ஒன்பது முறை வெற்றி பெற்றுள்ளார்.

முதலமைச்சராக இருந்தபோது ஏழைகளின் நலனுக்கான அவரது பல திட்டங்கள் மிகவும் பாராட்டப்பட்டன. ஏழு கிலோ அரிசி வழங்கிய அன்ன பாக்ய யோஜனா, பள்ளி செல்லும் மாணவர்களுக்கு 150 கிராம் பால், இந்திரா கேன்டீன் ஆகியவை இவற்றில் அடங்கும்.

லிங்காயத் மற்றும் இந்து வாக்காளர்கள் மத்தியில் டி.கே.சிவகுமாரை விட குறைவான பிரபலமாக அவர் கருதப்படுகிறார். மைசூர் ஆட்சியாளர் திப்பு சுல்தானின் பிறந்தநாளை பிரமாதமாகக் கொண்டாடியது, பிஎப்ஐ மற்றும் எஸ்டிபிஐ அமைப்புகளின் உறுப்பினர்களை சிறையில் இருந்து விடுவித்தது போன்றவை இதற்கான காரணங்கள்.

சித்தராமையாவின் வாய்ப்பு சிவகுமாரைவிட பலவீனமானது என்று மூத்த செய்தியாளர் எம்.கே.பாஸ்கர் ராவ் கூறினார். கடந்த ஐந்தாண்டுகளில் சிவகுமார் செய்த கடின உழைப்புக்கான வெகுமதியை அவர் இந்த முறை பெறக்கூடும் என்றார் அவர்.

“இருவருக்கும் இடையே ஏற்கெனவே பனிப்போர் நடந்து வருகிறது, அது வருங்காலத்திலும் தொடரும். சித்தராமையா ஐந்து ஆண்டுகள் முதல்வராகப் பணியாற்றிய அனுபவம் உள்ளவர். கடந்த 35 ஆண்டுகளாக சித்தராமையாவை எனக்குத் தெரியும். டி.கே.சிவகுமார் அமைச்சரவையில் துணை முதலமைச்சர் பதவியை அவர் ஏற்றுக்கொள்ள மாட்டார்,” என்றார் அவர்.

“சித்தராமையா அமைதியாக இருக்க மாட்டார். சிவகுமாருக்கு எதிராக நிச்சயம் ஏதாவது செய்வார்,” என்கிறார் எம்.கே.பாஸ்கர் ராவ்.

மறுபுறம் மூத்த செய்தியாளர் ஹேமந்த் அத்ரி, முதல்வர் பதவிக்கான மிகப்பெரிய போட்டியாளராக சித்தராமையாவை கருதுகிறார்.

“இதற்கு முன் சித்தராமையா முதலமைச்சராக இருந்தவர். காங்கிரஸ் தலைமையுடன் நல்ல அரசியல் தொடர்பு உள்ளவர். இது தனக்கு கடைசி தேர்தல் என்று அவரே கூறியிருப்பதால் அவருக்கு முதல் வாய்ப்பை காங்கிரஸ் தரலாம்,” என்கிறார் அவர்.

“கர்நாடகாவில் இரண்டரை ஆண்டுகள் பார்முலாவை காங்கிரஸ் கொண்டுவரக்கூடும். இதன்கீழ் சித்தராமையாவுக்கு முதல் வாய்ப்பு வழங்கப்படலாம்,” என்று அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும் காங்கிரஸின் இந்த பார்முலா சத்தீஸ்கரில் வெற்றி பெறவில்லை.



### மல்லிகார்ஜூன கார்கே

இந்த இரு தலைவர்களைத் தவிர, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கேவின் பெயரும் முதல்வர் பதவிக்கான போட்டியில் உள்ளது.

தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றால் முதல்வர் பதவியை ஏற்பீர்களா என்று தேர்தலுக்கு முன் பல சந்தர்ப்பங்களில் அவரிடம் கேட்கப்பட்டது.

நீலம் சஞ்சீவ ரெட்டியை போல தான் முதல்வர் பதவிக்கான போட்டியில் இல்லை என்று ஏப்ரல் மாதம் கர்நாடக மாநிலம் கோலாரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் தெளிவாகக் கூறியிருந்தார்.

1962இல் நீலம் சஞ்சீவ ரெட்டி காங்கிரஸ் தலைவராக இருந்தபோது ஆந்திர பிரதேச முதல்வர் பதவிக்கான போட்டியில் ஈடுபட்டார்.

முதலமைச்சராக வர முடியவில்லையே என்ற வேதனை கார்கேவின் உள்ளத்தில் எப்போதும் இருந்துகொண்டே இருக்கிறது என்கின்றனர் அரசியல் ஆய்வாளர்கள். கர்நாடக முதல்வர் பதவி அவரிடமிருந்து மூன்று முறை கை நழுவிப்போனது.

1999இல் ஹை கமாண்ட், எஸ்.எம்.கிருஷ்ணாவை முதல்வராக்கியது இரண்டாவது முறையாக ஜேடிஎஸ் தலைவர் எச்டி தேவகௌடா, காங்கிரஸ் மற்றும் ஜேடிஎஸ் கூட்டணி அரசை வழிநடத்த கார்கேவைவிட தரம் சிங் பொருத்தமானவர் என்று நினைத்தார். மூன்றாவது முறையாக 2013இல் சித்தராமையா தனக்கு ஆதரவாக எம்எல்ஏக்களை வளைத்து கார்கேவை ஓரங்கட்டினார்.

ஆனால் ஒரு செய்தியாளர் சந்திப்பில் கார்கேவுக்காக முதல்வர் நாற்காலியை தியாகம் செய்வதாக டி.கே. சிவகுமார் பேசியுள்ளார்.

அரசியல் ஆய்வாளர் டி. உமாபதி, ஏப்ரல் மாதம் பேசுகையில், ‘கார்கே முதல்வர் நாற்காலியில் அமர விரும்பினார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால் இப்போது காங்கிரஸ் தலைவராக அவர், முதல்வர் பதவிக்கு மேலே உயர்ந்துவிட்டார்,” என்றார்.

“அவர் அதிலிருந்து கீழே வர விரும்பமாட்டார். அவரது சுயமரியாதை அதை அனுமதிக்காது. குலாம் நபி ஆசாத் மற்றும் காங்கிரஸ் தலைவர் கபில் சிப்பலை சந்திக்க கார்கே காத்திருக்க வேண்டிய காலம் இருந்தது. இன்று அவரைச் சந்திக்க பல தலைவர்கள் காத்திருக்கிறார்கள்.”

மல்லிகார்ஜூன கார்கே முதல்வர் பதவியை ஏற்க மறுப்பதற்கு வேறு சில காரணங்களும் உள்ளன. தமிழகம், தெலங்கானா அரசியல் போல கர்நாடக அரசியல் இல்லை என்று மூத்த செய்தியாளர் எம்.கே.பாஸ்கர் ராவ் கூறுகிறார்.

“கர்நாடகா அரசியலுக்கு அவர் திரும்பினால் மகனின் அரசியல் எதிர்காலத்தை அவர் பணயம் வைக்க வேண்டியிருக்கும். அவர் ஸ்டாலின் செய்தது போல் மகனை தன் அமைச்சரவையில் அமைச்சராக்க முடியாது. தனது மகனை காங்கிரஸ் கட்சியில் முன்னே கொண்டு வருவதே அவரது லட்சியம்,” என்கிறார் அவர்.

காங்கிரஸ் தலைவர் கார்கேவின் மகன் பிரியங்க் கார்கே சித்தபூர் தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார். முன்னதாக சித்தராமையா அமைச்சரவையில் அமைச்சராகவும் இருந்துள்ளார். இம்முறையும் அவருக்கு அமைச்சரவையில் இடம் கிடைக்கும் என்கிறார் எம்.கே.பாஸ்கர்.

“சமீபத்தில்தான் கார்கே காங்கிரஸ் தலைவராகியுள்ளார். இம்முறை கர்நாடகாவில் நிறைய உழைத்துள்ளார். அதன் பலன் நம் அனைவரின் கண் முன்னால் உள்ளது. இந்த வயதிலும் அவரது உழைப்பு சிறப்பாக உள்ளது,” என்று ஹேமந்த் அத்ரி கூறினார்.

“காங்கிரஸ் கட்சி பாஜகவின் இந்துத்துவ அரசியலுக்கு ஒரு தீர்வைக் கண்டுபிடித்துள்ளது. தலித் தலைவர் மற்றும் ஓபிசி கொடியுடன் காங்கிரஸ் முன்னேறுகிறது. சாதி மக்கள் தொகை கணக்கெடுப்பு பற்றி கட்சி பேசுகிறது. இந்த உத்தி பாஜகவின் இந்துத்துவ பேச்சை முறிக்கும் வேலையைச் செய்கிறது. காங்கிரஸ் இதையே மற்ற தேர்தல்களிலும் பயன்படுத்தப் போகிறது,” என்று ஹேமந்த் அத்ரி குறிப்பிட்டார். (பிபிசி)

# பதினாலாவது மே பதினெட்டு

நிலாந்தன்

எதற்காக தமிழ் மக்கள் உயிர்களை, உறுப்புகளை, சொத்துக்களை கல்வியை இன்னபிறவற்றைத் தியாகம் செய்தார்களோ, எதற்காக லட்சக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்களோ, காணாமல் ஆக்கப்பட்டார்களோ,அதற்குரிய நீதி தமிழ்மக்களுக்கு கிடைக்க வேண்டும். எந்தப் போராட்டத்தின் பெயரால் தமிழ் மக்கள் அழிக்கப்பட்டார்களோ, அந்தப் போராட்டத்தின் பலன் தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டும். எனவே நினைவு கூர்தல் எனப்படுவது தமிழ்மக்கள் போராடியதன் பலனை பெறுவதற்கான ஓர் அரசியல் செயற்பாடுதான். நீதிக்கான தமிழ்மக்களின் போராட்டத்தில் அதுவும் ஒரு பகுதிதான்.

நவீன தமிழ் வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட இடத்தில், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள், அதிக தொகை மக்கள் கொல்லப்பட்ட ஒரு காலகட்டத்தை நினைவு கூர்வதே முள்ளிவாய்க்கால் நினைவுகூர்தல் ஆகும். எனவே முழுத் தமிழ் வரலாற்றிலும் நவீன காலத்தில் நிகழ்ந்த மிகப்பெரிய படுகொலை என்ற அடிப்படையில் அந்த உணர்ச்சிப் புள்ளியில் முதலாவதாக, ஈழத்தமிழர்களை ஒரு தேசமாக திரட்டலாம். இரண்டாவதாக, உலகெங்கிலும் பரந்துவாழும் தமிழர்களை இன அடிப்படையில் திரட்டலாம். அவ்வாறு திரட்டி அந்த கூட்டுத் துக்கத்தை, கூட்டுக் கோபத்தை, கூட்டு அரசியல் ஆக்க சக்தியாக மாற்றினால் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெறுவதற்கான உந்துவிசையாக அது அமையும். எனவே நினைவுகூர்தல் எனப்படுவது நீதிக்கான போராட்டத்தின் பிரிக்கப்படவியலாத ஒரு பகுதி. அதை அவ்வாறு வடிவமைக்க வேண்டும். இப்பொழுது நடைமுறையில் உள்ள பொது ஏற்பாட்டுக் குழுவானது ஒரு குறிப்பிட்ட இடத்தை ஒரு குறிப்பிட்ட நாளில் நிர்வகிக்கும் ஒரு கட்டமைப்பே தவிர அது மேற்சொன்ன அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு பொதுக் கட்டமைப்பு அல்ல.

கடந்த 14 ஆண்டுகளாக பொருத்தமான ஒரு பொறிமுறையை, பொருத்தமான ஒரு பொதுக் கட்டமைப்பை தமிழ் மக்கள் உருவாக்கவில்லை. காலம் ஆற்றாத துக்கம் என்று எதுவுமில்லை. கூட்டுத் துக்கத்தை உரிய பொறிமுறைக்கூடாக கூட்டு ஆக்கசக்தியாக மாற்றவில்லை என்றால் அது வெறும் துக்கமாகச் சுருங்கிவிடும். எனவே ஒரு கூட்டுத் துக்கத்தை கூட்டு ஆக்கசக்தியாக மாற்றி, அதை நீதிக்கான போராட்டத்தின் ஊக்க சக்தியாக மாற்ற வேண்டும். அதற்கு வேண்டிய பொறி முறையும் கட்டமைப்பும் உருவாக்கப்பட வேண்டும். இது முதலாவது.

இரண்டாவது, முள்ளிவாய்க்காலை நினைவு கூர்வது என்பது ஒரு யுத்த களத்தின் இறுதிக் கட்டத்தை நினைவு கூர்வதுதான். அந்த யுத்த களத்தில் தமிழ் மக்களுக்கு தாமாக முன்வந்து தம் உயிர்களைக் கொடுத்தவர்கள், உறுப்புகளை இழந்தவர்கள்,கல்வியை இன்னபிறவற்றை இழந்தவர்கள், என்று ஆயிரக்கணக்கானவர்கள் உண்டு. போரில் நேரடியாக சம்பந்தப்படாமலேயே கொல்லப்பட்டவர்களும் காணாமல் ஆக்கப்பட்டவர்களும் உண்டு. அவர்களனைவர்க்கும் உதவி தேவை. நிவாரணம் தேவை. ஆறுதல் தேவை. ஆனால் கடந்த 14 ஆண்டுகளில் எத்தனை பேருக்கு அவ்வாறான உதவிகள் கிடைத்திருக்கின்றன?

புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகம் குறிப்பிடத்தக்க அளவிற்கு உதவிகளை செய்கின்றது. ஆனால் அது ஒரு மையத்திலிருந்து திட்டமிடப்பட்ட, ஒரு மையத்தில் இருந்து வழங்கப்படுகின்ற உதவி அல்ல. கடந்த 14 ஆண்டுகளில் போரால் பாதிக்கப்பட்ட பலர் கைவிடப்பட்டிருக்கிறார்கள். போரில் ஈடுபட்ட பலர் கைவிடப்பட்டிருக்கிறார்கள், அல்லது அவமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இறுதிக்கட்டப் போரில் தமது குடும்பத்தின் உழைக்கும் நபரை அல்லது நம்பிக்கை நட்சத்திரமாக இருந்தவரை அல்லது வருமான வழியை இழந்த பல குடும்பங்கள் உண்டு. அக்குடும்பங்கள் யாவும் கடந்த 14 ஆண்டுகளில் தேறி எழுந்து விட்டனவா இல்லையா என்று பார்க்க வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்தின் வீட்டில் அல்லது ஒரு தியாகியின் வீட்டில் அல்லது காணாமல் ஆக்கப்பட்டவரின் வீட்டில் அடுப்பு எரியவில்லை என்றால்,முள்ளிவாய்க்காலில் ஏற்றப்படும் சுடர்களின் மகிமை குறைந்து விடும். எனவே போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கு ஒரு பொருத்தமான பொறிமுறையும் அதற்கு வேண்டிய கட்டமைப்பும் தேவை.

புலம்பெயர்ந்த தமிழ்மக்களிடம் போதியளவு பணம் உண்டு. உதவுவதற்கு விருப்பமும் உண்டு. ஆனால் பொருத்தமான ஒரு பொறிமுறையை, பொருத்தமான ஒரு கட்டமைப்பை யார் உருவாக்குவது? கடந்த 14 ஆண்டுகளாக அவ்வாறான கட்டமைப்புகளை ஏன் உருவாக்க முடியவில்லை?

குறிப்பாக, முன்னாள் இயக்கத்தவர்களின் கதி என்னவென்று பார்க்க வேண்டும். நடுத்தர வர்க்கத்தை சேர்ந்தவர்கள் வசதியான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டார்கள். அல்லது நாட்டில் ஏதோ ஒரு விதத்தில் “செற்றில்ட்” ஆகிவிட்டார்கள். ஆனால் இப்பொழுதும் செற்றில்ட் ஆகாத பல குடும்பங்கள் உண்டு. 2009க்குப் பின் முன்னாள் இயக்கத்தவர்கள்



மத்தியில் குடும்பங்கள் பிரிந்திருக்கின்றன. பிள்ளைகள் கைவிடப்பட்டுள்ளன. பெற்றோர் அனாதைகள் ஆகியிருக்கிறார்கள். போரில் பட்ட காயத்தின் விளைவாக ஏற்பட்ட நோய்க்கு மருத்துவம் செய்யக் காசு இல்லாமல் தத்தளிக்கும் பலர் உண்டு. என்ன நோய் என்று தெரியாமலேயே இறந்து போன பலர் உண்டு. இவர்களுக்கெல்லாம் உதவ ஏதாவது கட்டமைப்பு இருக்கிறதா? இல்லையென்றால் யார் பொறுப்பு?

இலங்கைத் தீவிலேயே போரால் பாதிக்கப்பட்ட தரப்புக்களில் இப்பொழுதும் அதிகம் ஆபத்துக்கு உள்ளாகக்கூடிய ஒரு வகுப்பினராக (அழளவ எரடநெசயடிடந) காணப்படுவது முன்னாள் இயக்கத்தவர்கள்தான். நாட்டின் சட்ட அமைப்பின்படி புனர்வாழ்வு ஒரு தண்டனை அல்ல என்பதனை கடந்த 14 ஆண்டு காலம் நிரூபித்திருக்கிறது. இந்நிலையில் மீண்டும் மீண்டும் ஒரே குற்றத்துக்காகத் தண்டிக்கப்படக்கூடிய ஒரு தரப்பாக முன்னாள் இயக்கத்தவர்கள் காணப்படுகிறார்கள். அது தொடர்பாக நமது சட்டத்தரணிகள் என்ன செய்திருக்கிறார்கள்? தனிப்பட்ட வழக்குகளில் தோன்றி குறிப்பிட்ட முன்னாள் இயக்கத்தவரை விடுதலை செய்திருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் அதை ஓர் அரசியல் விவகாரமாக மாற்றி அதற்கு வேண்டிய சட்ட ஏற்பாடுகளைக் கொண்டு வர ஏன் ஒருவரும் முயற்சிக்கவில்லை?

அது மட்டுமல்ல, முன்னாள் இயக்கத்தவர்கள் புனர்வாழ்வின் பின் ஜனநாயக அரசியல் இறங்கினார்கள். அவ்வாறு இறங்கியவர்கள் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக்கூட்டணி போன்றவற்றில் இணைந்து தேர்தல் கேட்டார்கள். துயரம் என்னவென்றால் ஒருவருமே தேர்தலில் பெறுமதியான வெற்றிகளைப் பெறவில்லை. துயிலுமில்லங்களில் தமிழ்மக்கள் விட்ட கண்ணீர் யாவும் எங்கே போய் சேருகின்றது? அதை யார் வாக்குகளாக மாற்றுகிறார்கள்?

“உன்னுடைய சமூகத்திற்காக நீ கல்வியைத் துறந்தாய், உறுப்புகளை இழந்தாய், உயிரைக் கொடுக்கச் சித்தமாக இருந்தாய், ஆனால் உனக்காக இந்தச் சனம் குறைந்தது உள்ளூராட்சி சபையில் ஒரு வட்டாரத்துக்கு தேவையான ஆயிரம் வாக்குகளைக் கூடத் தரவில்லையே? அப்படியென்றால் உன்னுடைய இறந்த காலத்துக்குப் பொருள் என்ன? ” என்று ஒரு முன்னாள் இயக்கத்தவரின் பிள்ளை கேட்டால், அதற்கு அந்த தகப்பன் அல்லது தாய் என்ன பதில் சொல்ல முடியும்? அதே கேள்விக்கு தமிழ் மக்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

முன்னாள் இயக்கத்தவர்கள் தடுப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் அவர்களை தடுப்பில் வைத்திருந்த தரப்பு அவர்களோடு உறவுகளைப் பேணும். அது ஒரு யதார்த்தம். அவ்வாறு பேணுவதன்மூலம் அரசாங்கம் இரண்டு விடயங்களைச் சாதிக்கலாம், ஒன்று, அவர்களைக் கண்காணிக்கலாம், இரண்டு, அவர்களோடு தொடர்ந்து தொடர்புகளைப் பேணினால், அவர்களுடைய சொந்த மக்களே முன்னாள் இயக்கத்தவர்களை சந்தேகிப்பார்கள். எதிரியின் ஆட்கள் என்று முத்திரை குத்துவார்கள். எந்த சமூகத்துக்காக அவர்கள் போராடினார்களோ, அந்தச் சமூகமே அவர்களைப் புறமொதுக்கி,அவமதித்து விலகிச் செல்லும் ஒரு நிலையை ஏற்படுத்தலாம்.

கடந்த 14 ஆண்டுகளில் தமிழ்க் கட்சிகளே அவ்வாறு முன்னாள் இயக்கத்தவர்களைக் குற்றம்சாட்டி வருகின்றன. முன்னாள் இயக்கத்தவர்களில் ஒரு பகுதியினர் அவ்வாறு அரசு புலனாய்வுத் துறையோடு சேர்ந்து செயல்படக்கூடும். ஆனால் அதற்காக எல்லாரும் அப்படியல்ல. கடந்த 14 ஆண்டுகளில் தேர்தலில் இறங்கிய முன்னாள் இயக்கத்தவர்களில் யாருமே பொருத்தமான வெற்றிகளை பெறாததற்கு என்ன காரணம்? இந்த விடயத்தில் முன்னாள் இயக்கத்தவர்களின் கட்சியை அரச புலனாய்வுத் துறையின் ஆட்கள் என்று விமர்சிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் நின்று தேர்தல் கேட்டவர்களும் இதுவரை வெற்றி பெறவில்லை என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

எனவே இறந்தவர்களை நினைவு கூர்வது என்பது



அவர்கள் கொல்லப்பட்ட யுத்த களத்தை நினைவு கூர்வதுதான். அந்த யுத்த களத்தில் தமது சமூகத்துக்காகப் போராடியவர்களை அவர்களுடைய நோக்கு நிலையில் இருந்து புரிந்து கொள்ள முயற்சிப்பதும்தான். இது இரண்டாவது.

மூன்றாவது, இறந்தவர்களை நினைவுகூர்வது என்பது, அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு நினைவுகளைக் கடத்துவது. நீதிக்கான தமிழ்மக்களின் போராட்டம் மேலும் நீண்ட காலத்துக்கு இழுபடலாம் அதுமட்டுமல்ல கடந்த 14 ஆண்டுகளில் தொழில்நுட்பப் பெருக்கம் காரணமாகவும், தலைமைத்துவ வெற்றிடம் காரணமாகவும், புதிதாக எழுந்து வரும் ஒரு தலைமுறை பெருமளவுக்கு அரசியல் நீக்கம் செய்யப்பட்டதாகவோ,அல்லது இலட்சிய நீக்கம் செய்யப்பட்டதாகவோ மாறிவருகின்றது. அந்தத் தலைமுறைக்கும், உலகெங்கிலும் புலம்பெயர்ந்து சிதறி வாழும் ஈழத்தமிழர்களின் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் நினைவுகளைக் கடத்த வேண்டியிருக்கிறது. நினைவுகளின் தொடர்ச்சிக்குள் ஒரு தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டியிருக்கிறது. அதற்கு நினைவு கூர்தல் அவசியம். இது மூன்றாவது.

நாலாவதாக, நினைவு கூர்தல் எனப்படுவது, ஒரு கூட்டுச் சிகிச்சை போன்றது. துக்கத்தை கொட்டித் தீர்க்கும் நாளும், இடமும் அது. வெளிவழிய விடப்படாத துக்கம் உள்ளுக்குள் கிடந்து குமைந்து அடங்காத கோபமாக மாறிவிடும். அல்லது நோயாக மாறிவிடும். எனவே உளவியல் அர்த்தத்திலும் பண்பாட்டு அர்த்தத்திலும் துக்கத்தை வெளிவழிய விடவேண்டும். அந்த அடிப்படையில் நினைவு கூர்தல் என்பது ஒரு குணமாக்கல் செய்முறை. ஒரு பண்பாட்டுச் செய்முறை.

மேற்கண்ட நான்கு முக்கிய காரணங்களையும் முன்வைத்து நினைவு கூர்தலை ஒழுங்குபடுத்த வேண்டும். ஆனால் கடந்த 14 ஆண்டுகளாக நினைவு கூர்தல் அவ்வாறு ஒழுங்குபடுத்தப்படுகின்றதா? அவ்வாறு ஒழுங்குபடுத்தப்படவில்லை என்றால் அதற்கு யார் பொறுப்பு?

இந்தக் கேள்வியை மறுவளமாகக் கேட்டால் தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு? என்றுதான் கேட்க வேண்டும். ஏனென்றால் கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் மக்களின் அரசியல் எனப்படுவது கட்சி அரசியலாகத்தான் காணப்படுகின்றது. கொழும்பு அல்லது வெளித்தரப்புகள் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு பதில்வினை ஆற்றும் அரசியலாக தறுக்கணித்துப் போய்விட்டது. அது தேசத்தை கட்டியெழுப்பும் ஓர் அரசியல் அல்ல.

சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராகவும், காணிப் பறிப்புக்கு எதிராகவும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிகேட்டும் தமிழ்மக்கள் போராடுகிறார்கள்தான். ஆனால் அவற்றில் பெரும்பாலானவை, எனது கடந்த வாரக் கட்டுரையில் கூறியது போல, பதில் வினையாற்றும் நிகழ்வு மைய அரசியல்தான். அவை ஒரு தேச நிர்மாணத்துக்குரிய கட்டியெழுப்பும் அரசியல் அல்ல.

ஒரு தேசத்தைக் கட்டியெழுப்பும் அரசியலில்தான் நினைவு கூர்தல், அதற்குரிய மகிமையோடும் அரசியல் அடர்த்தியோடும் அனுஷ்டிக்கப்படும். அதற்குரிய பல்வகைமையோடு அனுஷ்டிக்கப்படும். இல்லையென்றால் கட்சிகளாக பிரிந்திருக்கும் மக்கள் நினைவுகூர்தலை அதற்குரிய பெறுமதியுணர்ந்து அனுஷ்டிக்கப் போவதில்லை. மாறாக, அது ஒரு துக்க நிகழ்வாக, அல்லது செயலுக்குப் போகாத பிரகடனங்களை வாசிக்கும் ஒரு நிகழ்வாக, ஒரு சடங்காகச் சுருங்கிப் போய்விடும்.

இம்முறை, பல்கலைக்கழக மாணவர்கள் சமூகப்பங்களிப்போடு கஞ்சி காய்ச்சுவது ஒரு நல்ல முன்னுதாரணம். அதேசமயம் கட்சிகளுக்கு எதிராக கருத்துக்களைக் கூறாமல் விட்டால் அதுவும் ஒரு நல்ல முன்னுதாரணம். முள்ளிவாய்க்காலில் தாமாகத் திரளக்கூடிய மக்களை, கட்சிகளும் பொதுக்கட்டமைப்புகளும் மாணவர்களும் பிரிக்காமல் விட்டாலே போதும். இறந்தவர்களின் ஆத்மா இந்த ஒரு விடயத்திலாவது சாந்தி அடையும். ஏனெனில் மனநல மருத்துவ நிபுணர் சிவதாஸ் கூறுவது போல “நினைவுகூர்தல் எனப்படுவது காயங்களைக் குணப்படுத்துவது, காயங்களைக் கிளறுவது அல்ல.” ●

# டெங்கு ஒழிப்பு அதிகாரிகளுக்கு இடையூறு விளைவித்தால் வழக்கு!

கொழும்பு, மே. 16

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக பிரவேசிக்கும் சுகாதார அதிகாரிகளுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டால், அது தொடர்பில் வழக்கு தொடரவுள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் தலைவர் உபுல் ரோஹன இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இதேவேளை, விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தின் கீழ், கடந்த இரண்டு நாட்களில் மாத்திரம் மேல் மாகாணத்தில் 3,142 டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மேல்மாகாண போக்குவரத்து பிரிவினர் நடத்திய சோதனை நடவடிக்கைகளின் போது, 3,344 பேருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

முப்படையினர், காவல் துறையினர், சுகாதார வைத்திய அதிகாரிகள், உள்ளூராட்சி அலுவலக அதிகாரிகள் மற்றும் ஏனைய பொதுமக்கள் உட்பட 7,351 பேர் இந்த விசேட டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தில் பங்குபற்றியுள்ளனர். (அ)

# பயணியிடமிருந்து இரத்தினக்கல் திருடிய விமான நிலைய ஊழியர்கள் இருவர் கைது

கொழும்பு, மே 16

சிட்னிக்கு விமானத்தில் செல்லவிருந்த பயணி ஒருவரிடமிருந்து 14 இரத்தினக் கற்கள் அடங்கிய பொதியொன்றை திருடிய குற்றச்சாட்டில் கட்டுநாயக்க விமான நிலைய ஊழியர்கள் இருவரை விமான நிலைய பொலிஸார் கைது செய்தனர்.

கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி சிட்னிக்கு செல்லவிருந்த விமானத்தில், பயணப்பொதிகளை வைக்கும் பகுதியிலிருந்த பயணி ஒருவரின் பொருட்களிலிருந்து இந்த இரத்தினக்கல் அடங்கிய பை திருடப்பட்டுள்ளதாக விமான நிலைய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் பயணப் பொதிகளை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபடுபவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# லக்சம்பேர்க்-இலங்கை புரிந்துணர்வு ஒப்பந்தம்

கொழும்பு, மே. 16

லக்சம்பேர்க்குடன் இருதரப்பு ஆலோசனைகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கை அரசு கைச்சாத்திட்டுள்ளது.

ஸ்ரொக்ஹோமில் நடைபெற்ற இரண்டாவது ஐரோப்பிய யூனியன் இந்தோ-பசிபிக் அமைச்சர்கள் மன்றத்தின் ஒரு பகுதியாகஇந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இதன்பின்னர் லக்சம்பேர்க் வெளிவிவகார அமைச்சர் ஜீன் அசெல்போர்னுடனும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பின்போது விமான சேவைகள் தொடர்பான ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது மற்றும் வர்த்தகம், முதலீடுகள் மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (அ)

# நிவாரண குழுக்கள் தயார் நிலையில்!

கொழும்பு, மே 16

சீரற்ற வானிலை நிலவி வருவதால், வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு உதவி மற்றும் ஆதரவை வழங்குவதற்காக, தென் மாகாணத்தில் சில பகுதிகளில் நிவாரணக் குழுக்களை நிலை நிறுத்தியுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா வின் பணிப்புரைக்கு அமைய, தெற்கு கடற்படை கட்டளைப் பிரிவினால் காலி, அக்குரஸ்ஸ, கொட்டபொல, நாகொட, தவலம, கம்புறுப்பிட்டிய மற்றும் அத்துரலிய ஆகிய பகுதிகளுக்கு நிவாரணக் குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

ஜின் மற்றும் நில்வள ஆறுகளின் பெருக்கெடுத்ததால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கு கடற்படையினர் நிவாரண குழுக்களை அனுப்பி வைத்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்க இந்த குழுக்கள் தயாராக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பொது மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்க கடற்படையின் மேலதிக நிவாரணக் குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## அக்காவின் வீட்டுக்கு தீ வைத்த தம்பி கைது

கொழும்பு, மே 16

நிட்டம்புவ பகுதியில் உள்ள தமது சகோதரியின் வீட்டுக்கு தீ வைத்த இளைய சகோதரர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் வத்துபிட்டிவல - ருக்கவில பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடையவர்.

சம்பவத்தில் வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதுடன், சகோதரியின் பிள்ளையின் பாடசாலைப் புத்தகங்கள், சீருடைகள் மற்றும் உபகரணங்கள் அனைத்தும் எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர். (அ)

## நுரைச்சோலை மின் நிலையம் 100 நாட்களுக்கு மூடப்படுகிறது

கொழும்பு, மே 16

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் 3ஆவது அலகு நூறு நாட்களுக்கு மூடப்படும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இதன்படி, ஜூன் 13 ஆம் திகதி முதல் 100 நாட்களுக்கு மின் உற்பத்தி நிலையத்தின் 3ஆவது அலகு மூடப்படும் என அமைச்சர் தனது ருவிற்றர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த காலப்பகுதியில் மின்வெட்டு இருக்காது எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். பழுது பார்ப்பு மற்றும் பரா மரிப்பு பணிகளுக்காக மூடப் படும் இந்த காலப்பகுதியில் ஏனைய அனல் மின் நிலையங்க ளுடன் இணைந்து மின்சா ரத்தை தொடர்ச்சியாக வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)






# கல்முனை ஆதார வைத்தியசாலையில் களைகட்டிய சர்வதேச தாதியர் தினம்





காரைதீவு, மே. 16

கல்முனை ஆதார வைத்திய சாலையின் சர்வதேச தாதியர் தின நிகழ்வு வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் இரா. முரளீஸ்வரன் தலைமையிலும் தாதியர் நலன் புரி சங்கத்தின் ஏற்பாட்டிலும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் இரா. முரளீஸ்வரன், பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஜே. மதன் ,தாதிய கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி வீரசிங்கம், வைத்திய நிபுணர்களான குழந்தை நல மருத்துவ நிபுணர் வி. பிரேமினி, சத்திர சிகிச்சை நிபுணர் ஏ.டபிள்யு.எம்.சமீம், கண் சத்திர சிகிச்சை நிபுணர் என். நிரோஷன், பொது வைத்திய நிபுணர் என்.இதயகுமார், என்பு சத்திர சிகிச்சை நிபுணர் எஸ்.வருண் பிரசாந்த் மற்றும் மகப்பேற்று வைத்திய நிபுணர் எச்.எம்.ரசீன் முஹமட், தாதிய பரிபாலகர் என்.சசிதரன், தாதிய பரிபாலகி திருமதி எல்.சுஜேந்திரன், நிர்வாக உத்தியோகத்தர் ரி. தேவஅருள் ஆகியோருக்கும் மாலை அணிவித்து வரவேற்பளிக்கப்பட்டது.

மேலும் தாதிய உத்தியோகத்தர் ஏ.என்.டி அல்விஸினால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது.

இந்நிகழ்வில் தாதிய கல்லூரி முன்னாள் அதிபர் மற்றும் தாதிய பரிபாலகியால் தாதிய தின கேக் வெட்டியும் அனைத்து தாதிய உத்தியோகத்தர்களும் சுடர் ஏந்தி உறுதிமொழியும் எடுக்கப்பட்டது.

மேலும் தாதிய பரிபாலகர் என்.சசிதரனால் விளக்கக்காட்சியுடனான உரையும் நிகழ்த்தப்பட்டது.

வைத்தியசாலையின் ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பும் இடம் பெற்றது.

(அ)

# தொடர் சைக்கிள் திருட்டில் ஈடுபட்டு வந்தவர் சிக்கினார்



அக்கரைப்பற்று, மே. 16

நீண்ட காலமாக சைக்கிள் திருட்டில் ஈடுபட்டு வந்த சந்தேக நபரான இளைஞரை நிந்தவூர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளில் சைக்கிள்கள் திருடிச்செல்லப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகள் நிந்தவூர் பொலிஸ் நிலையத்துக்கு கிடைக்கப்பெற்றிருந்தன.

இதனை அடுத்து விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றை அடுத்து விசாரணை மேற்கொண்ட பொலிஸ் குழு, இவ்வாறு காணாமல்போன சைக்கிள்களை மீட்டதுடன் திருட்டுச் சந்தேக நபர் மற்றும் திருடப்பட்ட சைக்கிள்களை கொள்வனவு செய்தவர்களையும் ஞாயிற்றுக்கிழமை மாலை கைது செய்தது.

இந்நடவடிக்கையை நிந்தவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ. எம் .நஜீம் தலைமையிலான சிறு குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான குணரட்ன குழுவினர் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் தயக்கமின்றி கலந்துகொள்ளுங்கள்!

அக்கரைப்பற்று, மே. 16

**மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு வார நிகழ்வுகளில் அம்பாறை மாவட்டத்தில் அனைவரும் தயக்கமின்றிக் கலந்து கொள்ளலாம் என சமூக சேவகர் தாமோதரம் பிரதீபன் குறிப்பிட்டார்.**




மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கல்முனையில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அம்பாறை மாவட்ட சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து அம்பாறை மாவட்டத்தில் மே 18 தமிழர் இனவழிப்பு நாளான முள்ளிவாய்க்கால் தினத்தை அனுஷ்டிப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

அதனடிப்படையில் எதிர்வரும் மே 16 மற்றும் மே 17 ஆம் திகதிகளில் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பாண்டிருப்பு பகுதியிலுள்ள பிரதான வீதிகளில் இந்த நிகழ்வுகளை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.

இந்த நிகழ்வுகள் யாவும் இறுதி யுத்தத்தின்போது முள்ளிவாய்க்கால் பகுதியில் மக்கள் அனுபவித்த துயரங்கள், படுகொலைகள், அந்த நேரம் உணவுக்காக அவர்கள் பட்ட கஷ்டங்கள் அந்த நேரம் அவர்கள் உணவாக அரிசியையும் நீரையும் கலந்து அவித்து பருகிய கஞ்சி உள்ளிட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் காட்சிப்படுத்த காத்திருக்கின்றோம்.

இதன் நோக்கம் கடந்த யுத்தத்தின்போது எமது மக்கள் அனுபவித்த வேதனைகளை தற்போதைய சந்ததிகள் அறியவேண்டும்.

எனவே அம்பாறை மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் பொதுமக்களும் இணைந்து மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு வார நிகழ்வுகளில் சிறப்பிக்கவும் உறவுகளுக்காக பிரார்த்தனை செய்யவும் அன்புரிமையோடு அழைப்பதுடன் அனைத்துப் பாதுகாப்பு அனுமதிகளையும் பெற்று ஒழுங்கு செய்துள்ளதால் உறவுகள் அனைவரும் தயக்கமின்றி இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்-என்றார்.

(அ)

# பெரியகல்லாறு கடற்கரையில் நீராட சென்ற மாணவன் மாயம்!

மட்டக்களப்பு, மே. 16

பெரியகல்லாறு மயானத்திற்குப் பின்னால் உள்ள கடற்கரையில் நேற்று முன் தினம் மாலை 4.30 மணியளவில் நண்பர்களுடன் நீராடச் சென்ற சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவன் நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமற்போயுள்ளார்.

பாலச்சந்திரன் லெஷான் என்ற 17 வயது மாணவன் கடல் அலையினால் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் காணாமல் போயுள்ளார்.

அவரோடு நீராடச் சென்ற ஏனைய இரு மாணவர்களும் கடற்கரையில் இருந்தவர்களால் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

காணாமற்போன மாணவனை கற்குடா கடற்படையினரின் உதவியுடன் தேடும் பணி தொடர்கிறது.

(அ)

# கசிப்புடன் பெண்ணொருவர் உட்பட நான்கு பேர் கைது!

மட்டக்களப்பு, மே. 15

மட்டக்களப்பு, நாவற்குடா நொச்சிமுனை 5 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள 34, 750 மில்லி லீற்றர் கசிப்புடன் பெண்ணொருவர் உள்ளிட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என காத்தான்குடி பொலிஸ் நிலைய போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் பொறுப்பதிகாரி எச்எம். சியாம் தெரிவித்தார்.

இச்சம்பவம் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நொச்சிமுனையில் இடம்பெற்றுள்ளது.

காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் வழிகாட்டலில் மாவட்ட ரகசிய தகவல் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய போதைவஸ்து ஒழிப்புப் பிரிவினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போது நாவற்குடா நொச்சிமுனை 5 ஆம் குறுக்குத் தெருவில் நீர்நிலையொன்றினுள் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்திருந்த சட்டவிரோத கசிப்பு கொள்கலன்களை பொலிஸார் மீட்டதுடன் சந்தேக நபர்களையும் கைது செய்தனர்.

(அ)

# மின்சாரசபை அலுவலகத்துக்கு முன் ஒல்லிக்குளம் மக்கள் ஆர்ப்பாட்டம்!



மட்டக்களப்பு, மே. 16

மின்சாரம் பெறுவதற்காக விண்ணப்பித்து ஒரு வருடம் கடந்து விட்ட நிலையிலும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லையெனவும் உடனடியாக மின்சாரம் வழங்குமாறு கோரி மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஒல்லிக்குளம் குடியேற்ற கிராம மக்கள் நேற்றுக் காலை காத்தான்குடி இலங்கை மின்சாரசபை அலுவலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வெளி இடங்களிலிருந்து குடியேறிய மக்களுக்கென அமைக்கப்பட்டுள்ள ஒல்லிக்குளம் குடியேற்ற கிராமத்தில் சுமார் 50 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இவர்கள் மின்சாரம் பெறுவதற்கென விண்ணப்பித்து ஒரு வருட காலமாகியும் இதுவரை மின்னிணைப்பு ஏற்படுத்தப்படவில்லை.

இக்கிராமத்தில் மின்சாரமின்மையால் மாணவர்கள் கல்வி கற்கமுடியாமலும் பொதுமக்கள் பாம்பு தொல்லைகளினாலும் பெரும் அவலங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக காத்தான்குடி பிரதேச மின் அத்தியட்சகர் கனகசபை சிவேந்திரனிடம் கேட்டபோது- குறித்த கிராமத்திற்கு மின்னிணைப்பை ஏற்படுத்து சுமார் 20 இலட்சம் ரூபாய் வரை செலவாகும்.இதற்கான நிதி இலங்கை மின்சார சபையிடம் இல்லை.நிதி கிடைத்தவுடன் குறித்த பணியினை நிறைவு செய்யலாம்-என்றார்.

(அ)

# மியன்மாரை புரட்டிய மொச்சா புயல் காற்று!

## பல இடங்களில் கடும் பாதிப்பு

**நைபிட்டோ, மே. 16**

**மொச்சா புயலினால் மியன்மாரின் துறைமுக நகரம் கடும் பாதிப்பைச் சந்தித்துள்ளது. மேலும் புயலினால் நாட்டின் தகவல் தொலை தொடர்பு சேவை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.**



மத்திய கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய அதிதீவிர புயல் ‘மொக்கா’ நேற்று முன்தினம் தென்கிழக்கு பங்களாதேஷ் மற்றும் வடக்கு மியன்மார் கடற்கரையை அதிதீவிரப் புயலாகக் கடந்தது. அப்போது அதிகபட்சமாக மணிக்கு 210 கி.மீ. வேகத்தில் சூறாவளிக் காற்று வீசியது.

மொச்சா புயலினால் பங்களாதேஷ் மற்றும் மியன்மார் கடும் தேசத்தை எதிர்கொண்டுள்ளன. இதில் மியன்மாரே மொக்கா புயலினால் நேரடி பாதிப்பை சந்தித்துள்ளது.

மணிக்கு 210 கிமீ வேகத்தில் வீசிய காற்றினால் மியன்மாரில் செல்போன் கோபுரங்கள், வீடுகளின் கூரைகள் என அனைத்தும் காற்றில் தூக்கி வீசப்பட்டன.

குறிப்பாக மியன்மார் துறைமுக நகரமான சிட்வே, தலைநகர் ரக்கைன் மொச்சா புயலினால் கடும் சேதத்தை சந்தித்துள்ளன. புயலினால் பெய்த மழையினால் பல இடங்களில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. புயலினால் மியன்மாரில் தகவல் தொலை தொடர்பு சேவை பாதிக்கப்பட்டுள்ளது. தலைநகர் ரக்கைன் கடும் பாதிப்பை சந்தித்துள்ளது என்று மியன்மார் ராணுவம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மியன்மாருக்கான ஐக்கிய நாடுகள் சபையின் குடியுரிமை ஒருங்கிணைப்பாளர் ராமநாதன் பாலகிருஷ்ணன் கூறும்போது, “ஏற்கெனவே பல்வேறு பிரச்னைகளால் மனிதாபிமான உதவிகளை எதிர்நோக்கியுள்ள ஒரு நாட்டில் இதுபோன்ற அதிதீவிர புயல் தாக்குவது என்பது ஒரு கொடுங்கனவு போன்றதே. இது ஆயிரக்கணக்கான மக்களுக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.” என்றார்.

மொச்சா புயலினால் ஏற்பட்ட பாதிப்பு பற்றி மியன்மார் ராணுவம் இதுவரை முழுமையாக வெளியிடவில்லை.

மொச்சா புயலை ஒட்டி பங்களாதேஷ் மற்றும் மியன்மாரில் 4 லட்சத்துக்கு அதிகமான மக்கள் இடப்பெயர்ந்தனர்.

மக்கள் அடர்த்தி அதிகமாக உள்ள பங்களாதேஷில் உள்ள அகதிகள் முகாம்கள் இந்த மொச்சா புயலினால் கடுமையான பாதிப்பை சந்திக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் மொச்சா புயலில் அகதிகள் முகாம்கள் குறைந்த அளவிலான பாதிப்பை சந்தித்துள்ளன. (அ)



# உக்ரைன் வீரர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு பிரான்ஸ் உறுதி!

பாரிஸ், மே. 16

உக்ரைனுக்கு பல இலகுரக டாங்கிகள் மற்றும் கவச வாகனங்களை அனுப்புவதாகவும், அவற்றை திறம்பட பயன்படுத்த அந்நாட்டு வீரர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்குவதாகவும் பிரான்ஸ் உறுதியளித்துள்ளது.

இதேவேளை பிரான்ஸுக்கு விஜயம் செய்துள்ள உக்ரேனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கிக்கும் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனுடன் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றிருந்தது.

இரு தலைவர்களுக்கும் இடையில் மூன்று மணிநேர பேச்சுவார்த்தைக்குப் பின்னர் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மேலும் ரஷ்ய தாக்குதல்களை எதிர்கொள்ளவும் மக்களைப் பாதுகாப்பதற்காகவும் உக்ரேனின் வான் பாதுகாப்பு திறன்களை ஆதரிப்பது குறித்தும் இதன்போது பிரான்ஸ் கவனம் செலுத்தியுள்ளது.

அத்துடன் ரஷ்யாவின் ஆக்கிரமிப்பை பலவீனப்படுத்துவதற்கும் பொருளாதாரத் தடைகள் மூலம் ரஷ்யா மீது அழுத்தத்தை அதிகரிக்க வேண்டிய தன் அவசியம் குறித்தும் இதன்போது பேசப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சீன அடிமைப்படுத்தலில் சிக்குண்டுள்ளது ரஷ்யா

## பிரான்ஸ் அதிபர் மக்ரோனின் மதிப்பீடு

பாரிஸ், மே. 16

உக்ரைனில் இதுவரை நடைபெற்ற போரில் “ரஷ்யா பூகோள அரசியல் ரீதியாகத் தோற்றுப் போய் விட்டது” என்றும் “சீனாவைப் பொறுத்தவரையில் அது ஒருவிதமான அடிமைப்படுத்தல் வடிவத்தில் ரஷ்யாவினுள் நுழைகிறது” எனவும் அதிபர் மக்ரோன் தெரிவித்திருக்கிறார்.

பிரான்ஸில் வெளியாகின்ற வணிக சார்பு பத்திரிகைக்கு வழங்கியுள்ள விசேட செவ்வி ஒன்றிலேயே அவர் தனது இவ்வாறான மதிப்பீட்டை வெளியிட்டிருக்கிறார்.

ரஷ்யா அதன் பாரம்பரியக் கூட்டணி நாடுகளுடன் - சீனா போன்றவற்றுடன் - மீண்டும் நட்புறவுபாராட்டுவதையும், சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகளை இணைத்து நேட்டோ அமைப்பு விரிவுபடுத்தப்படுவது போன்ற போருக்குப் பிந்திய மாற்றங்களையும் சுட்டிக் காட்டி, அவற்றின் அடிப்படையிலேயே பூகோள அரசியல் ரீதியாக மொஸ்கோ தோற்றுப் போய்விட்டது என்ற தனது கருத்தை மக்ரோன் அந்தச் செவ்வியில் முன்வைத்துள்ளார்.



“உக்ரைன் நாடு முழு அளவில் பாதுகாக்கப்படுவதிலேயே ஐரோப்பாவின் பாதுகாப்புக் கட்டமைப்பின் நீண்ட எதிர்காலம் தங்கியுள்ளது என்பதை எப்போதுமே வலியுறுத்தி வருகிறேன். அது ரஷ்யாவுடன் மோதாமல் நிலையான சமநிலையுடன் கட்டியமைக்கப்படவேண்டியது ஆகும். ஆனால் அதற்கு இன்னும் பல படிகளைத் தாண்டவேண்டி இருக்கும்” -என்றும் மக்ரோன் மேலும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை வெளியாகியுள்ள அவரது செவ்வியில்

நாட்டில் உருவாகியுள்ள ஓய்வூதியச் சட்ட எதிர்ப்பு, அது தொடர்பான கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புக் கோரிக்கை , விலைவாசி அதிகரிப்பு, நடுத்தர மக்களது வாழ்க்கைச் சுமை உக்ரைன் போர் உட்படப் பல்வேறு விடயங்கள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளித்திருக்கிறார். (அ)

# துருக்கி ஜனாதிபதி தேர்தலின்போது யாருக்கும் பெரும்பான்மையில்லை!



அங்காரா, மே. 26

துருக்கி ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கு தேவையான வாக்கு எண்ணிக்கையை தற்போதைய ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகனும் போட்டியாளர் கிளிக்டரோக்லுவும் பெறவில்லையென தகவல் வெளியாகியுள்ளது.

இதனால், இரண்டாம் கட்டத் தேர்தலை நடத்தவேண்டிய சூழல் எழுந்துள்ளது. மே 28ஆம் திகதி இரண்டாம் கட்ட தேர்தல் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், வாக்கு எண்ணிக்கை பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பு இதுவரை வெளியாகவில்லை.

துருக்கியில் ஜனாதிபதித் தேர்தல் முடிந்து வாக்கு எண்ணிக்கை நடந்து வருகிறது.

வேட்பாளர் ஒருவர் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்கை பெற்றாலே அவர் வெற்றியாளராக அறிவிக்கப்படுவார். யாருமே 50 வீத வாக்கை பெறாத பட்சத்தில் இரண்டாம் கட்ட தேர்தல் நடத்தப்படும்.

தற்போது உத்தியோகபூர்வ அரச ஊடகங்களால் அறிவிக்கப்பட்ட வாக்கு எண்ணிக்கை எந்த ஒரு வேட்பாளரும் குறைந்தது 50 சதவீத வாக்குகளைப் பெறாத முடிவை நோக்கிச் செல்வதாகத் தெரிகிறது.

தேர்தல் முடிவுகளின் தொடக்கத்தில், தற்போதைய ஜனாதிபதி எர்டோகன் முன்னிலை வகித்தார். ஆனால் இறுதிக்கட்டத்தில் நெருக்கமான நிலையே காணப்படுகிறது. (அ)

# ரஷ்யா, சீனாவை சாடுகிறது ஜப்பான்

ரோக்கியோ, மே. 16

ரஷ்யாவுடன் சீனா தனது இராணுவ ஒத்துழைப்பை அதிகரித்து வருகிறது. இதன்மூலம் ஜப்பான் கடற்பகுதி அருகே கூட்டு போர்ப்பயிற்சி மற்றும் தாய்வானை சுற்றி அதன் இராணுவ நடவடிக்கை உள்ளிட்ட காரணங்களுக்காக இந்த இராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்துகிறது என ஜப்பான் தெரிவித்துள்ளது.

உக்ரைன்-ரஷ்யா போரில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஆதரவாக இருந்து வருகின்றன.

அதேபோல் ரஷ்யாவுக்கு ஆதரவாக அதன் நட்பு நாடான சீனா இருந்து வருகிறது. ஒரு ஆண்டுகளை தாண்டி நடந்து வரும் இந்த போரை முடிவுக்கு கொண்டு வர உலக நாடுகள் பலவும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.

அதன்படி ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி போரை முடிவுக்கு கொண்டு வருவதாக சீனாவும் அறிவித்தது. ஆனால் இன்னும் போர் முடிந்தபாடில்லை.

இந்த நிலையில் ஸ்வீடனில் ஐரோப்பிய மற்றும் இந்தோ-பசிபிக் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டம் நடைபெற்றது.

இதில் ஜப்பான் வெளியுறவுத்துறை அமைச்சர் யோஷிமாசா ஹயாஷி தெரிவிக்கையில்-

உக்ரைன் மீதான ரஷ்யப் போர் சர்வதேச ஒழுங்கின் அடித்தளத்தையே அசைத்துவிட்டது. ஆனால் ரஷ்யாவுடன் சீனா தனது இராணுவ ஒத்துழைப்பை அதிகரித்து வருகிறது.

இதன்மூலம் ஜப்பான் கடற்பகுதி அருகே கூட்டு போர்ப்பயிற்சி மற்றும் தாய்வானை சுற்றி அதன் இராணுவ நடவடிக்கை உள்ளிட்ட காரணங்களுக்காக இந்த இராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்துகிறது-என்றார். (அ)



## இத்தாலியன் ரென்னிஸ் இகா நான்காவது சுற்றில்!

ரோம், மே 16

இத்தாலியன் ஒப்பன் ரென்னிஸ் தொடரில் முதல் நிலை வீராங்கனை இகா ஸ்வியாரெக் நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

இத்தாலியன் சர்வதேச ரென்னிஸ் தொடர் ரோமில் நடக்கிறது.

இதில் நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவில் 3ஆவது சுற்று போட்டியில் முதல்நிலை வீராங்கனை இகா ஸ்வியாரெக் (போலந்து) 6-2, 6-0 என்ற நேர் செற்றில் லிசி சுரேங்காவை (உக்ரைன்) தோற்கடித்து 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றப் போட்டிகளில் வான்ட்ரோசோவா (செக் குடியரசு), அஸ்டாபென்கோ (லாத்வியா) ஆகியோரும் மூன்றாவது சுற்றுக்குள் நுழைந்தனர். (ஐ)





## மிகமோசமான சாதனையை ரோஹித்துடன் பகிர்ந்த தினேஷ்!

சென்னை, மே 16


ஐ. பி. எல். வரலாற்றில் அதிகமுறை டக் அவுட்டான வீரர் என்ற மோசமான சாதனையில் ரோஹித் சர்மாவை தினேஷ் கார்த்திக் சமன் செய்துள்ளார்.

முன்னதாக, மும்பையின் அணித் தலைவர் ரோஹித் சர்மா சொந்தக்காரராக உள்ளார். அவர் மொத்தம் 16 முறை டக் அவுட் ஆகியுள்ளார். இந்த நிலையில், இந்த மோசமான சாதனை பட்டியலை தற்போது தினேஷ் கார்த்திக் சமன் செய்துள்ளார்.

ராஜஸ்தான் அணிக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் அவர் தினேஷ் கார்த்திக் டக் அவுட் ஆகி வெளியேறினார். இதன் மூலம் ஐபிஎல் தொடரில் தினேஷ் கார்த்திக் மொத்தம் 16 முறை டக் அவுட் ஆகியுள்ளார். அத்துடன், இந்த பட்டியலில் முதல் இடத்தில் உள்ள ரோஹித் சர்மாவுடன் இணைந்துள்ளார்.

இந்த வரிசையில் சுனில் நரைன் மற்றும் மந்தீப் சிங் (தலா 15), அம்பத்தி ராயுடு (14), ஹர்பஜன் சிங், பியூஸ் சாவ்லா, மக்ஸ்வெல், பார்த்தீவ் பட்டேல், ரகானே, மனீஷ் பாண்டே(தலா 13 முறை), கௌதம் கம்பீர்(12 முறை), அஸ்வின், டி வில்லியர்ஸ், வோர்ணர், கோலி ஆகியோர் (தலா 10) அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர். (ஐ)

# கொல்கத்தா அபார வெற்றி! சென்னை அணிக்கு நெருக்கடி!



சென்னை, மே 16

ஐ. பி. எல். இருபது -20 கிரிக்கெட் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் (சி. எஸ். கே.) அணிக்கு எதிரான போட்டியில் சுனில் நரைனின் அற்புதமான சுழல்பந்து வீச்சாலும், ரிங்கு சிங்கின் பொறுப்பான துடுப்பாட்டத்தாலும் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி.

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பாட்டத்தில் சென்னை 6 விக்கெட்கள் இழப்புக்கு 144 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக ஷிவம் துபே 34 பந்துகளில், 3 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 48 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார். அவருக்கு துணையாக விளையாடிய ஜடேஜா 24 பந்துகளில், 20 ஓட்டங்கள் எடுத்தார்.

ருதுராஜ் கெய்க்வாட் (17), அஜிங்க்ய ரஹானே (16) ஆகியோர் வருண் சக்ரவர்த்தி பந்தில் ஆட்டமிழந்தனர். டெவன் கொன்வே 28 பந்துகளில், 3 பௌண்ட்ரிகளுடன் 30 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஷர்துல் தாகூர் பந்தில் ஆட்டமிழந்தார். அம்பதி ராயுடு (4), மொயின் அலி (1) ஆகியோரை ஒரே ஓவரில் வெளியேற்றினார் சுனில் நரைன். டோனி 3 பந்துகளில் 2 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

கொல்கத்தா அணி தரப்பில் பந்து வீச்சில் சுனில் நரைன் 4 ஓவர்களை வீசி 15 ஓட்டங்களை மட்டும் விட்டுக்கொடுத்து 2 விக்கெட்களை வீழ்த்தினார். வருண் சக்ரவர்த்தி 36 ஓட்டங்களை வழங்கி 2 விக்கெட்டைகைப்பற்றினார். ஷர்துல் தாகூர் 3 ஓவர்களை வீசி 15 ஓட்டங்களை கொடுத்து ஒரு விக்கெட் வீழ்த்தினார். 145 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய செய்த கொல்கத்தா அணிக்கு தொடக்கம் சற்று அதிர்ச்சியாக இருந்தது. ரஹ்மனுல்லா குர்பாஷ் (1), வெங்கடேஷ் ஐயர் (9), ஜசன் ரோய் (12) ஆகியோர் தீபக் சாஹர் பந்தில் ஆட்டமிழந்தனர். எனினும் அணித் தலைவர் நிதிஷ் ராணா, ரிங்கு சிங் இணை பொறுப்புடன் விளையாடி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றது.

இருவரும் சென்னையின் பந்து வீச்சை அருமையாக எதிர்கொண்டு அரைச்சதம் அடித்தனர். ரிங்கு சிங் 43 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகளுடன் 54 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மொயின் அலியால் ரன் அவுட் செய்யப்பட்டார். அப்போது வெற்றிக்கு 18 பந்துகளில் 13 ஓட்டங்களே தேவையாக இருந்தன.

நிதிஷ் ராணா 44 பந்துகளில், ஒரு சிக்ஸர், 6 பௌண்ட்ரிகளுடன் 57 ஓட்டங்களும், அந்த்ரே ரஸல் 2 ஓட்டங்களும் சேர்க்க கொல்கத்தா அணி 18.3 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 147 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆட்ட நாயகன் விருதை ரிங்கு சிங் பெற்றார்.

கொல்கத்தா அணிக்கு இது 6ஆவது வெற்றியாக அமைந்தது. 13 போட்டிகளில் விளையாடியுள்ள அந்த அணி 12 புள்ளிகளுடன் பட்டியலில் 7ஆவது இடத்தில் உள்ளது. தற்போதைய வெற்றியின் மூலம் அந்த அணி இறுதியாட்டத்துக்கு முந்தைய (பிளே ஓவ்) சுற்றுக்கு முன்னேறுவதற்கான வாய்ப்பில் நீடிக்கிறது.

இதேவேளையில் தனது 13ஆவது ஆட்டத்தில் 5ஆவது தோல்வியை சந்தித்த சென்னை 15 புள்ளிகளுடன் பட்டியலில் 2ஆவது இடத்தில் தொடர்கிறது. சென்னை தனது கடைசி லீக் போட்டியில் வரும் 20ஆம் திகதி டில்லி கப்பிடல்ஸ் அணியுடன் மோதுகிறது. இறுதியாட்டத்துக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேற வேண்டுமானால் டில்லியில் நடைபெறும் இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றே ஆக வேண்டும் என நெருக்கடியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது சென்னை அணி.

## இறுதிக்கு முந்தைய சுற்றை தக்கவைத்தது பெங்களூர்!



ஜெய்ப்பூர், மே 16

ஐ. பி. எல். இருபது - 20 தொடரில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியிடம் 112 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது ராஜஸ்தான் றோயல்ஸ் அணி.

ஜெய்ப்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப் பெடுத்தாடியபெங்களூர் 5 விக்கெட்கள் இழப்புக்கு 171 ஓட்டங்கள் குவித்தது. அணித் தலைவர் டு பிளெசிஸ் 55, கிளென் மக்ஸ்வெல் 54, விராட் கோலி 18 ஓட்டங்கள் எடுத்தனர். இறுதிக் கட்டத்தில் அனுஜ் ராவத் 29 ஓட்டங்கள் விளாசினார்.

172 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் தொடக்கத்திலேயே ஆட்டம் கண்டது. முதல் ஓவரிலேயே யஷஸ்வி ஜெய்ஸ்வால் ஓட்டம் ஏதும் எடுக்காமல் முகமது சிராஜ் பந்தில் ஆட்டமிழந்தார். ஜோஸ் பட்லர் (0), அணித் தலைவர் சஞ்சு சாம்சன் (4), ஜோ ரூட் (10) ஆகியோர் வெய்ன் பர்னல் பந்தில் நடையை கட்டினர்.

தொடர்ந்து தேவ்தத் படிக்கல் (4), துருவ் ஜூரல் (1) ஆகியோர் பிரேஸ்வெல் பந்தில் ஆட்டமிழந்தனர். ஷிம்ரன் ஹெட்மேயர் 35 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மக்ஸ்வெல் பந்தில் விக்கெட்டை பறிகொடுத்தார். தொடர்ந்து ஸம்பா (0), ஆசிப் (0) கரன் சர்மா பந்தில் நடையை கட்ட ராஜஸ்தான் அணி 10.3 ஓவரில் 59 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

இதனால் பெங்களூர் அணி 112 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அந்த அணிக்கு இது 6ஆவது வெற்றியாக அமைந்தது. 12 ஆட்டங்களில் விளையாடி உள்ள பெங்களூர் 12 புள்ளிகளுடன் பிளே ஓவ் சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை தக்கவைத்துக் கொண்டது.

இதேவேளையில் தனது 13ஆவது ஆட்டத்தில் 7ஆவது தோல்வியை பதிவு செய்த ராஜஸ்தான் அணி பிளே ஓவ் சுற்றுக்கு முன்னேறுவதற்கான வாய்ப்பை கடினமாக்கி உள்ளது.

# டிசெம்பருக்குள் 430 அரச நிறுவனங்களை முழுமையாக விற்பனை செய்ய தீர்மானம்

## முன்னிலை சோஷலிச கட்சி குற்றச்சாட்டு



கொழும்பு, மே 16

**எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள், 430 அரச நிறுவனங்களை முழுமையாக விற்பனை செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளமை தெரியவந்துள்ளதாக, முன்னிலை சோஷலிச கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்றுக்கொள்ள முடியாதளவு கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகள் பல, எதிர்வரும் மாதங்களில் முன்னெடுக்கப்படவுள்ளதை நாம் தொடர்ச்சியாக அறிவுறுத்தி வருகின்றோம்.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொண்ட இணைக்கப்பாட்டுக்கு அமைவாக இந்த கடன்மறுசீரமைப்பை அரசாங்கம் முன்னெடுக்கவுள்ளது.

அரசாங்கத்தின் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகள் காரணமாக மக்கள் பலியாடுகளாக போகின்றனர்.

இதனால் ஏற்படப்போகும் மக்கள் எதிர்ப்பலைகளை தடுப்பதற்காகவே அரசாங்கமானது பாதுகாப்புகளை பலப்படுத்தி வருகின்றது.

எதிர்வரும் மூன்று மாதங்களில் அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகும்.

எதிர்வரும் ஐந்து, ஆறு மாத காலப்பகுதிக்குள் 430 அரச நிறுவனங்களை விற்பனை செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஊடகங்களின் வாயிலாக அறிந்துகொள்ள முடிந்துள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் 430 அரச நிறுவனங்களை முழுமையாக விற்பனை செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளமையை அறிய முடிகின்றது.

சில நிறுவனங்களை ஏலத்துக்கு விடுவதற்கும் அதேபோன்று சில நிறுவனங்களை மூடிவிடுவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த நடவடிக்கைகைய அரசாங்கமானது துரிதமாக முன்னெடுத்து செல்லவுள்ளதாகவும் அறியக் கிடைத்துள்ளது.

அரசாங்கம் விற்பனை செய்ய எதிர்பார்த்துள்ள 430 நிறுவனங்களில் முதலிடத்தில் எரிபொருள் கூட்டுத்தாபனம், மின்சார சபை, சிறிலங்கன் எயார்லைன்ஸ், அரச கப்பல் கூட்டுத்தாபனம், தேசிய வடிமைப்பு அதிகார சபை, அரச பொறியியல் கூட்டுத்தாபனம், லங்கா சத்தொச, இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம், மைக்ரோ பிரைவட் நிறுவனம், அரச அச்சக்க் கூட்டுத்தாபனம், ஐடின், தேசிய கால்நடை உற்பத்தி அதிகார சபை உள்ளிட்ட நிறுவனங்கள் காணப்படுகின்றன.

எனவே இவ்வாறான சகல அரச நிறுவனங்களையும் விற்பனை செய்யும் திட்டத்திலேயே அரசாங்கம் உள்ளது.

அரச நிறுவனங்களை விற்பனை செய்து நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சனைகளிலிருந்து விடுபட முடியும் என்று சிலர் நினைக்கக்கூடும். எனினும் அது ஒருபோதும் சாத்தியப்படப் போவதில்லை.

இவை அனைத்தையும் விற்பனை செயததன் பின்னர் 6 பில்லியன் டொலர் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றார்கள்.

எமது நாட்டில் வெளிநாட்டுக் கடன் மட்டும் 53 பில்லியன் டொலர் காணப்படுகின்றது.

எனவே இந்த நிறுவனங்களை விற்பனை செய்து 6 பில்லியன் டொலரை பெற்றுக்கொண்டதன் பின்னர் அதற்கு பின்பு விற்பனை செய்வதற்கு நாட்டில் ஒன்றும் மிஞ்சப்போவதில்லை.

அதன் பின்பு நாட்டுக்கே உரித்தான சிங்கராஜ வனங்கள், கனிய வளங்களை விற்பனை செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கும்.

2002 காலப்பகுதியில் ரணில் விக்கிரமசிங்க போன்றோர் சிங்கராஜ வனத்தை தனியார் மயப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு இருந்தனர்.

எனவே அரசாங்கத்தின் விற்பனை நடவடிக்கைகள் என்பது இத்துடன் முடிவடைந்துவிடப்போவதில்லை.

இறுதியில் நாட்டையே விற்பனை செய்யும் நடவடிக்கைக்கே அரசாங்கம் செல்லவுள்ளது- என்றார்.

(அ)

# மூன்று மடங்காக அதிகரித்த டெங்கு

கொழும்பு, மே. 16

2023 இல் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த இரண்டு வருடங்களிலும் பதிவாகியதை விட மும்மடங்கு அதிகமாகும் என மருத்துவ சேவைகள் உதவிப் பணிப்பாளர் வைத்தியர் ஜி. விஜேசூரிய தெரிவித்தார்.

மழைகாலம் தொடர்வதால் எதிர்வரும் வாரங்களில் குறித்த நோய்ப்பரவல் எண்ணிக்கை நாடளாவிய ரீதியில் மேலும் அதிகரிக்கும் என அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலிருந்து அதிகளவான நோயாளர்கள் பதிவாகுவதை நாங்கள் அவதானித்து வருகின்றோம்.

எனவே, நுளம்புகளின் வாழ்விடங்களை அழித்தல், நுளம்பு விரட்டிகளைப் பயன்படுத்துதல், நீர் தேங்கும் இடங்களை சுத்தம் செய்தல், பாதுகாப்பான ஆடைகளை அணிதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்களுக்கு அறிவுறுத்துகின்றோம்.

வைத்தியசாலைகளில் சாதாரண வார்டுகளில் இடப்பற்றாக்குறை தற்போது இல்லை. தீவிர சிகிச்சைப் பிரிவில் நெரிசல் ஏற்படக்கூடும்-என்றார்.

(அ)

# வெள்ளத்தில் மாத்தறை





கொழும்பு, மே. 16

நாட்டின் பல பகுதியில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக நில்வள கங்கை மற்றும் கிங் கங்கை பெருக்கெடுத்து ஓடுவதால், மாத்தறை மாவட்டத்தின் பல தாழ்வான பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

தவலம, நெலுவ, மொரவக, அக்குரஸ்ஸ, அத்துரலிய, பிடபெத்தர மற்றும் கொட்டபொல ஆகிய தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

(அ)

# சீரற்ற காலநிலையால் பாடசாலைகள் பூட்டு

கொழும்பு, மே. 16

சீரற்ற காலநிலை காரணமாக தென் மாகாணத்தின் பல பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்கு நேற்று விடுமுறை வழங்கப்பட்டது.

குறித்த பிரதேசங்களில் நேற்று முன் தினம் முதல் பெய்த கடும் மழையினால் பல பாடசாலைகள் வெள்ளத்தில் மூழ்கின.

அதன்படி, மொரவக்க கல்வி வலயத்துக்குட்பட்ட மொரவக்க மற்றும் கொட்டபொல பிரதேசங்களில் உள்ள அனைத்து பாடசாலைகளும் நேற்று மூடப்பட்டதாக மொரவக்க வலய அலுவலகம் அறிவித்தது.

அனர்த்த நிலைமை காரணமாக மொரவக கல்வி வலயத்துக்கு உட்பட்ட பஸ்கொட பிரதேசத்தில் ஊருபொக்க தேசிய பாடசாலை மற்றும் பட்டிவெல கனிது விதுஹல தவிர்ந்த அனைத்து பாடசாலைகளும் நேற்று மூடப்பட்டன.

முலட்டியான கல்வி வலயத்தின் திஹாகொட பிரிவுக்கு உட்பட்ட கிடலாகம கிழக்கு மற்றும் மேற்கு பாடசாலைகளும் நேற்று மூடப்பட்டன.

அக்குரஸ்ஸ கல்வி பிராந்தியத்தின் அக்குரஸ்ஸ மற்றும் மாலிம்பட பிரிவுகளுக்கு உட்பட்ட தியலபே கனிது கல்லூரி, அதுரலிய மகா வித்தியாலயம், ப/ஹரன்வில கனிது கல்லூரி மற்றும் பரடுவ கனிது கல்லூரி ஆகியவையும் நேற்று மூடப்பட்டன.

(அ)

# நீரில் மூழ்கி இருவர் மாயம்

கொழும்பு, மே. 16

மாவரல, ஆந்தலுவ பாலத்துக்கு அருகில் நடந்து சென்ற நபர் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல்போயுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் காலை பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆந்தலுவ, கௌல்ஹேன பிரதேசத்தில் வசிக்கும் 42 வயதான ஒருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

காணாமல்போன நபரை தேடும் பணியில் பொலிஸாரும் பிரதேசவாசிகளும் இணைந்து ஈடுபட்டுள்ளதுடன், மாரவில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, உடுதும்பர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீமுரே பிரதேசத்தில் சூரியாரண ஆற்றில் நீராடச் சென்றவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை இச்சம்பவம் தொடர்பாக உடுதும்பர பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திபுலகஸ்பிட்டிய, மஹியங்கனை பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய ஒருவரே இவ்வாறு காணாமல்போயுள்ளார்.

காணாமல்போனவர் சிலருடன் பயணித்தபோதே விபத்துக்குள்ளானதாக தெரியவந்துள்ளது.

(அ)

## பல விடயங்கள்...

அதிகாரப் பகிர்வு தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான பேச்சு நேற்று மாலை 5 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் ஆரம்பமானது.

சந்திப்பு ஆரம்பமானதுமே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "மாகாண சபைகளுக்கு இடைக்கால ஆலோசனை குழுவை நியமிப்பது குறித்து நீங்கள் அனுப்பிய அறிக்கை கிடைத்தது அது பற்றி பேசுவோமா", என்று கேட்டார்.

அந்த அறிக்கையை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த விக்னேஸ்வரன் எம். பி. தன்னிடம் இருந்த அந்த அறிக்கையை அங்கேயே வாசித்தார்.

இடையிலேயே அதனை மறித்த சுமந்திரன் எம். பி. இது காலத்தை இழுக்கும் செயல், மாகாண சபை தேர்தலை நடத்துவது குறித்து ஏற்கனவே தனிநபர் சட்டத் திருத்தத்தை முன்வைத்துள்ளேன். அதனை நிறைவேற்றி மாகாண சபை தேர்தலை வைக்க வேண்டும் என்று கூறினார்.

இந்தக் கருத்தை ஆமோதித்த சித்தார்த்தன் எம். பி., இந்த இடைக்கால ஆலோசனை குழுவின் அறிக்கையில் பிள்ளையான் எம். பி. மட்டுமே ஒப்பமிட்டுள்ளார்- என்று கூறினார்.

இதையடுத்து, அதிகாரப் பகிர்வு சம்பந்தமான புதிய அரசமைப்பு தொடர்பாக பேசப்பட்டது.

சுமந்திரன் எம். பி., "ஏற்கனவே தயாரிக்கப்பட்ட அரசமைப்பு வரைவு உள்ளது. அதிலிருந்து பணிகளை தொடரலாம்" என்று தெரிவித்தார்.

சித்தார்த்தன் எம். பி., "அரசமைப்பு திருத்தம் நீண்டகாலம் இழுபடும். தீர்வும் கிடைக்காது" என்று கூறினார்.

"அப்படியானால் என்ன செய்யலாம் ", என்று ஜனாதிபதி கேட்டார்.

மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என்று முன்மொழியப்பட்டது. இதனை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டனர்.

அத்துடன், மத்திய அரசாங்கம் காலத்துக்கு காலம் சட்டத் திருத்தங்கள் மூலம் பெற்றுக்கொண்ட மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டு முழுமையான அதிகாரங்கள் கொண்டதாக 13ஆம் திருத்தச் சட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக வலியுறுத்தினர்.

இது சம்பந்தமாக, அமைச்சர்கள், மற்றும் ஆட்சித் தரப்பினருடன் பேசியே முடிவு செய்ய வேண்டும். அவற்றை செய்வோம். என்று கூறிய ஜனாதிபதி மீண்டும் ஜூன் மாதத்தில் இது சம்பந்தமாக பேசுவோம் என்று கூறினார்.

சுமார் ஒன்றரை மணி நேரம் நடந்த இந்தப் பேச்சில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் த. சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், கோவிந்த கருணாகரம், தமிழரசு கட்சியின் சார்பில் இரா. சம்பந்தன், எம். ஏ. சுமந்திரன், சி. சிறீதரன், த. கலையரசன், சார்ள்ஸ் நிர்மலநாதன், தமிழ் மக்கள் கூட்டணியின் க. வி. விக்னேஸ்வரன், சுதந்திரக் கட்சியின் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

ஜனாதிபதியுடன், இராஜாங்க அமைச்சர் சி. சந்திரகாந்தன், நீதி அமைச்சர்கள் விஜயதாஸ ராஜபக்ஷ, பிரசன்ன ரணதுங்க ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

## வடக்கு, கிழக்கு...

எதிராக அந்தந்த மாகாண மக்கள் பிரதிநிதிகளால் தொடர்ந்தும் முறைப்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. இதையடுத்து அவர்களை பதவி விலகுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரியிருந்தார். அவர்கள் மறுத்து வந்த நிலையிலேயே மூவரும் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழ்...

வவுனியாவுக்கு எந்த முன்னறிவிப்பும் இன்றி மாற்றப்பட்டதாகத் தெரிவித்தே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக போராட்டத்தில் ஈடுபடும் பெண்கள் கூறுகையில், "நாங்கள் தமிழ் பெண்கள் 104 பேர் இருக்கின்றோம். 2012 இல் இருந்து இந்த முகாமில்தான் பணியாற்றுகி றோம். எங்களை வேலைக்கு எடுக்கும் போது கிளிநொச்சியில்தான் வேலை என்றார்கள். ஆரம்பத்தில் எங்களிடம் இராணுவத்துக்குதான் எடுக்கிறோம் என்று சொல்லவும் இல்லை. நாங்கள் வந்து விட்டோம் என்பதற்காகவே இவ்வளவு காலமும் வேலை செய்து கொண்டிருக்கிறோம். எங்களுடைய சேவை காலமும் நெருங்கி விட்டது. ஆனால் இன்று திடீரென்று எங்களை வவுனியா செல்லும்படி சொல்கிறார்கள்.

எங்கள் படையணியை கலைத்து விட்டதாகவும், வவுனியாவிலுள்ள இன்னொரு படையணியில் இணைத்துள்ளதாகவும் அறிவித்துள்ளனர். அது ஆண்களுடன் இணைந்த படையணி. எங்களை ஆண்கள் தங்கும் இராணுவ முகாமுக்கே அனுப்புகிறார்கள்.

நாம் அங்கு செல்ல குடும்ப சூழலும் பொருளாதார நிலையும் இடமளிக்காது.

இது பற்றி ஜனாதிபதி, இராணுவத் தளபதி, கிளிநொச்சி இராணுவ தளபதிக்கு கடிதம் அனுப்பியும் பலனில்லை. எமக்கு சாதகமான பதில் கிடைக்கும் வரை போராடுவோம் - என்று கூறினர். (ஐ)

## சட்டம்...

போவதில்லை என்று சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செய லாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அந்தக் கட்சியின் தலைமை பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரவித்தார்.

நாட்டில் ஜனநாயகம், சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதிப்படுத்தவில்லை. இதன் காரண மாகவே ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம். ஜனநாயகம், சட்டம் ஒழுங்கு ஆகிய வற்றை உறுதிப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையை மாத்திரம் ஜனாதிபதியிடம் முன்வைத்தோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறுகிய காலத்துக்குள் நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வந்துள்ளார். நாம் ஜனாதிபதியின் அதிகாரத்தை சவாலுக்குட்படுத்த போவதில்லை- என்றார். (ஐ)

## போர்க்காலத்தில்...

உடல் நலனைப் பரிசோதித்தவரும், அவரின் மரண செய்தியை உத்தியோக பூர்வமாக அறிவித்தவரும் இவரேயாவார்.

இருதய நோய் சிகிச்சை சிறப்பு மருத்துவரான இவர், யாழ்ப்பாணத்தில் நெருக்கடியான காலகட்டமான 80, 90ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேவையாற்றியிருந்தார்.

தனியார் மருத்துவமனைகளில் சேவையாற்றாத கொள்கையை கொண்டிருந்த இவர் யாழ்ப்பாணத்தில் தலைசிறந்த மருத்துவர்களையும் உருவாக்கியிருந்தார்.

மருததுவர் சிவகுமாரன் 'ஈழநாடு' முன்னாள் ஆசிரியரும் யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபருமான ந. சபாரட்ணத்தின் புதல்வருமாவார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வடக்கு...

ஒக்ரோபர் வரை வடக்கு மாகாண ஆளுநராக இருந்த திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் மீண்டும் நியமிக்கப்படவுள்ளார்.

இதேநேரம், கிழக்கு மாகாணத்தின் ஆளுநராக செந்தில் தொண்டமான் நியமிக்கப்படுவார் என்றும் நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## நினைவேந்தல்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் தமிழர் பகுதிகளில் ஆரம்பமாகியுள்ளமை தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நினைவேந்தல் செய்வதற்கு அனைவருக்கும் உரிமை உள்ளது. ஆனால், இன்னோர் இனத்தை வெறுப்பேற்றும் வகையில் நினைவேந்தக் கூடாது. நினைவேந்தல் உரிமை இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் உண்டு. ஜனநாயக நாட்டில் எந்த இன மக்களினதும் உரிமைகள் பறிக்கப்பட இடமில்லை.

இதேபோல் நினைவேந்தல் உரிமையையும் எவரும் தட்டிப் பறிக்க முடியாது. வடக்கிலுள்ளவர்கள் தெற்கிலுள்ளவர்கள் ஏனைய இடங்களிலுள்ளவர்கள் தங்கள் உறவுகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் நினைவேந்தலாம்." - என்றார். (ஐ)

## பெருந்துயர்...

தெரிவித்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

நீண்டகால வரலாற்றைக் கொண்ட ஆலயத்தில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமாக இருந்தால் அது சமூக நெருக்கடியையே உண்டாக்கும். நாட்டில் அமைதியையும் சமூக ஒருங்கிணைவையும் ஏற்படுத்துவதற்குப் பதிலாக அவற்றைச் சிதைக்கும் விதமாக அரசாங்கமே நடவடிக்கைகளை மேற்கொண்டால் அதனால் நாட்டுக்கே பாதிப்புகள் ஏற்படும்.

அத்துடன், இந்த நடவடிக்கையானது யுத்தத்தில் கொல்லப்பட்டோரை நினைவு கொள்ளும் 18.05.2023 அன்று நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருப்பது திட்டமிட்ட ரீதியில் சமூக நெருக்கடியை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுவதாகவே தெரிகிறது. நாட்டில் அமைதிச் சூழலை உருவாக்கி, பிரச்னைகளுக்குத் தீர்வைக் கண்டு, பொருளாதார ரீதியில் நாட்டை மீட்டெடுக்க முயற்சிக்கும் தாங்கள், இது தொடர்பாக உடனடியாக உரிய நடவடிக்கையை மேற்கொண்டு, இதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

ஏற்கனவே, வடக்கு - கிழக்குப் பகுதிகளில் சிலைகளை அமைப்பது, விகாரைகளைக் கட்டுவது என்றவிதமாகத் தொல்பொருள் திணைக்களத்தால் பொருத்தமற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் தொல்பொருள் திணைக்களம் என்ற பெயரைக் கேட்டாலே தமிழ், முஸ்லிம் மக்கள் கலவரமடையும் நிலை உருவாகியுள்ளது.

இன்று நாட்டுக்குத் தேவையாக இருப்பது அமைதியும் அரசியல் தீர்வும் பொருளாதார மீட்சியுமே. அதற்குரிய துறைகள் சிறப்பாக, துரிதமாக செயல்பட வேண்டும். பிரச்னைகளை உருவாக்கி, சமூகச் சிதைவை உண்டாக்கும் திணைக்களல்ல.

இந்த நாட்டில் மாற்றங்களைக் காண விளையும் விதமாக நாம் செயற்படுவோம். அதற்கான வழிவகைகளை தாங்கள் மேற்கொள்ள வேண்டும்- என்றுள்ளது. (ஐ)

## சிறுவர்...

செயல்களுக்கு கடுமையான தண் டனை வழங்கும் சட்டக் கட்டமைப்பு ஒன்றின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

களுத்துறை ஹோட்டல் ஒன்றின் மாடியில் இருந்து குதித்து 16 வயது சிறுமி உயிரிழந்த சம்பவம், களுத்துறை தனியார் வகுப்பு ஆசிரியர் ஒருவரால் 16 சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை போன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றமை தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி இந்த பணிப்புரையை வழங்கினார்.

நாட்டின் குழந்தைகளை பாதுகாப்பதற்கு தனியான சட்டமொன்றை கொண்டு வர வேண்டும். அதற்காக தற்போதுள்ள சட்டங்களை திருத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, இந்த சட்டக் கட்டமைப்பை தயாரிக்கும்போது, கைபேசி, சமூக வலைத்தளங்கள் போன்றவற்றை பயன்படுத்தி சிறுவர் துஷ்பிரயோகம் செய்யப்படுவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

அதன்படி, உரிய சட்டங்கள் உருவாக்கப்பட்ட பின்னர் அவை துரிதமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட உள்ளது. பாடசாலை பாடத்திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (ஐ)

## ஐ.எம்.எவ்...

நிவாசன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், இலங்கையின் பொருளாதாரம் 2023 இல் 3 சதவீதமாக சுருங்கும் என்றும் 2024 இல் 1.5 சதவீதமாக வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச நாணய நிதியம் இலங்கை அதிகாரிகளுடன் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக தொடர்ச்சியான ஆலோசனைகளை மேற்கொண்டு வருகிறது, இது மைக்ரோ பொருளாதார இலக்குகளை எட்டுவதை உறுதிப்படுத்துகிறது - என்றும் அவர் கூறினார். (ஐ)

## ரணிலிடமா...

பொறுப்பான அமைச்சர் வவுனியா மாவட்டம் மீது கவனம் செலுத்த வேண்டும். சட்டம் ஒழுங்கை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அண்மையில் மரணித்த ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வரின் மரணம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்குமாறு அமைச்சரிடம் தெரிவித்துள்ளேன். இவ்வாறான அடாவடிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் செயல்பாட்டை தமிழீழ விடுதலை இயக்கம் செய்யும்.

இதேவேளை, நாடு முழுவதும் இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகமாகியுள்ளன. எனவே, ஜனாதிபதி இதற்கான பதிலை மக்களுக்கு சொல்ல வேண்டும். முப்படைகளை களமிறக்கி மக்களை அச்சுறுத்துவது தவறான செயல்பாடகவே நான் பார்க்கிறேன்.

அண்மையில், ஜனாதிபதியுடன் எமது சந்திப்பு இடம்பெற்றது. சில விடயங்கள் தொடர்பாக அவர் உத்தர விட்ட பின்னரும் அதனை மீறும் செயல்பாடுகள் நடைபெற்றிருக்கின்றன.

வனவளத்திணைக்களம், தொல்லியல் திணைக்களம் ஆகியவற்றின் செயல்பாடு வன்னியிலும் பரவலடைந்துள்ளது. எனவே, இந்தத் திணைக்களங்களின் அதிகாரம் ஜனாதிபதியிடமா அல்லது மகிந்த ராஜபக்ஷவிடம் உள்ளதா என்ற சந்தேகம் உள்ளது.

மகிந்ததான் அவர்களுக்கு கட்டளையிடுகின்றாரா என்ற கேள்வி எமக்கு இருக்கிறது. எனவே, ஜனாதிபதி இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ஆடைத் தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயம்!

## பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 16

**இலங்கையின் ஆடைத் தொழிலாளர்கள் வேலை இழப்பை எதிர்நோக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச பொருளாதார நிபுணர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.**

**பொருளாதார மந்தநிலைக்கு மத்தியில் பல ஆடைத்தொழிற்சாலை ஒப்பந்தங்கள் பங்களாதேஷை நோக்கி நகர்வதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

2022ஆம் ஆண்டு இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில், ஆடைத் தொழிற்துறை அரைவாசியைக் கொண்டிருந்தது.

கோவிட்-19 தொற்று காலப் பகுதியில் கூட ஆடைத்தொழிற்துறை வருவாயை ஈட்டியிருந்த போதிலும், சர்வதேச சந்தையில் தற்போது ஏற்பட்டுள்ள ஆடைக்கான கேள்வி குறைவு காரணமாக ஆடைத்தொழிற்துறை பாரிய வீழ்ச்சியை எதிர்நோக்கியுள்ளது.

அதிலும் ஆடை ஏற்றுமதி வருவாயை பிரதானமாக நம்பியிருக்கும் இலங்கை போன்ற நாடுகள் பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளன.

இதன் காரணமாக இலங்கையின் ஆடைத்தொழிற்சாலையில் உள்ள பலர் தொழிலை இழக்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (அ)

## வர்த்தக நிலையம் முன்பாக வவுனியாவில் சடலம் மீட்பு!

வவுனியா, மே 16

வவுனியா நகர மத்தியிலுள்ள வர்த்தக நிலையம் முன்பாக நேற்று அதிகாலை சடலமொன்று மீட்கப்பட்டது.

பொது மகனொருவர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் குறித்த இடத்துக்குச் சென்ற பொலிஸார், உயிரிழந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலத்தை மீட்டனர்.

உயிரிழந்த நிலையில் காணப்பட்டவர் யாசகத்தில் ஈடுபடுபவராக இருக்கலாம் எனவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வருகின்றது. (அ)

## ஜனாதிபதி ரணிலுடன் இணைந்தார் ஹரிசன்

கொழும்பு, மே 16

முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுர மாவட்டத் தலைவருமான பி. ஹரிசன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான தனது ஆதரவை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி நாட்டுக்கு ஒரு எதிர்காலத்தை உருவாக்கியுள்ளதால், தான் அவருக்கு ஆதரவளிக்கவுள்ளதாக ஹரிசன் தெரிவித்தார்.

ஒரு அரசியல்வாதியால் பொதுவெளியில் வந்து கூட்டம் நடத்த முடியாத நிலை இருந்தது. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த நிலையை எல்லாம் மாற்றி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தியிருக்கின்றார்.

சுமார் 20 ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் விரைவில் ஜனாதிபதியுடன் இணைவார்கள் என அவர் மேலும் கூறினார். (அ)

## ஆலயத்தில் நடராஜர் சிலை திருடிய சிப்பாய் சிக்கினார்

வவுனியா, மே 16



வவுனியா பிரதேசத்தில் அமைந்துள்ள பிள்ளையார் கோவில் ஒன்றில் நடராஜர் சிலையை திருடியதாகக் கூறப்படும் இராணுவச் சிப்பாய் ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய் துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் சிலையை திருடி விற்பனைக்காக பையில் கொண்டு செல் லும்போது வான் சாரதிகள் குழுவினால் பிடிக்கப் பட்டு தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அக்கராயன்குளம் இராணுவ முகாமில் கடமையாற்றும் 21 வயதுடைய இராணுவ சிப்பாய் ஆவார். திருடப்பட்ட சிலையின் மதிப்பு 55,000 ரூபாய் என கோவிலின் பூசாரி பொலிஸாரிடம் கூறியுள்ளார். (அ)

## சீரற்ற வானிலையினால் 428 குடும்பங்கள் பாதிப்பு

கொழும்பு, மே 16

நிலவும் சீரற்ற வானிலையினால் கடந்த ஐந்து நாட்களில் 428 குடும்பங்களைச் சேர்ந்த 1872 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் சுதந்த ரணசிங்க தெரிவித்தார். அத்துடன், இதில் ஏழு பேர் காயமடைந்துள்ளதாகவும் ஒருவர் காணாமல் போயுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறும், சீரற்ற வானிலையினால் வீடுகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் தொடர்பில் மக்கள் அவதானமாக செயற்படுமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அனர்த்த பகுதிகளில் வசிப்பவர்கள் தங்கள் கைபேசிகளை எப்போதும் முழுமையாக மின்னேற்றம் (சார்ஜ்) செய்து வைத்திருக்குமாறு கோரப்பட்டுள்ளது. ஏனெனில் செயலில் உள்ள கைபேசி இணைப்பு பேரழிவு ஏற்படுமாயின் உதவிகளை பெறுவதற்கு இலகுவாக இருக்கலாம் என்று அவர் கூறினார். (அ)

# இம்மாதம் முதல் 2 வாரங்களில் 4 ஆயிரம் டெங்கு நோயாளர்கள்

## நிலைமை மோசமடைகின்றது

கொழும்பு, மே 16

இம்மாதத்தின் முதல் இரண்டு வாரங்களுக்குள் சுமார் 4,000 டெங்கு வைரஸ் நோயாளிகள் பதிவாகியுள்ளதாகவும், இது டெங்கு பற்றிய கடுமையான கவலைகளை எழுப்புகிறது என்றும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, கடந்த ஜனவரி 1 ஆம் திகதி முதல் மொத்தம் 33,656 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும், நேற்று முன் தினம் வரை 20 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் சீரற்ற வானிலை நுளம்புகளின் இனப்பெருக்கத்தை மேலும் அதிகரிக்கிறது என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தின் முதலாவது வாரத்தில் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், நாடு முழுவதும் மொத்தம் 1,954 டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்தனர். இவர்களில் 51.7 சதவீதமானோர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.

இதில் அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் கம்பஹாவில் இருந்து பதிவாகியுள்ளதுடன், அதன்படி, அந்த மாவட்டத்தில் 475 பேர் கண்டறியப்பட்டதாகவும், கொழும்பில் 412 பேர் பதிவாகியுள்ளதாக அந்தப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு நாடு முழுவதும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவினால் பல அதிக ஆபத்துள்ள பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதன்படி, கொழும்பு மாநகர சபையின் அதிகார வரம்புக்கு உட்பட்ட பகுதிகள், கொத்தட்டுவ, பிலியந்தலை, கடுவலை, மஹரகம, பத்தரமுல்லை, கம்பஹா மாவட்டத்தில் வத்தளை, நீர்கொழும்பு, பியகம, ராகம, ஜா-எல ஆகிய பகுதிகள் அதிக டெங்கு ஆபத்தான நிறைந்த பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. (அ)

## மகிந்தவை பிரதமராக்குமாறு ஜனாதிபதியிடம் கோரவில்லை

### கூறுகிறார் சாகர காரியவசம்

கொழும்பு, மே 16

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்படவில்லை என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மேலும், இதுபோன்ற செய்திகள் பொய்யானவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த சதித்திட்டங்களினூடாக பிரதமர் பதவியைப் பெறுவதற்குத் தயாராக இல்லை என்றும் மக்களாணையின் படி, அவர் பிரதமர் பதவியைப் பெறுவதற்குத் தயாராகவுள்ளார் என்றும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

"அவர் மக்களுக்காகவே பிரதமர் பதவியை விட்டு வெளியேறினார் என்றும் அவர் மீண்டும் இந்த நாட்டின் தலைமைக்கு திரும்பினால், அது மக்களின் விருப்பத்துடனேயே அமையும்" என்று அவர் கூறினார். (அ)

## இரண்டு பொருட்களின் விலை குறைத்த சதொச

கொழும்பு, மே 16

லங்கா சதொச நிறுவனம் இரண்டு நுகர்வுப் பொருட்களின் விலையை குறைத்துள்ளது.

அதன்படி, ஒரு கிலோகிராம் வெள்ளைச் சீனியின் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதனை நேற்று முதல் அமுலாகும் வகையில் 243 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய முடியும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. அத்துடன், 400 கிராம் பால் மாவின் விலையை 60 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 1080 ரூபாவாகும். (அ)



## களுத்துறைச் சிறுமி மரணம் நீதிமன்றின் முன் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மே 16

களுத்துறை விடுதி ஒன்றின் மேல் மாடியில் இருந்து விழுந்து 16 வயதுடைய பாடசாலை மாணவி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் நால்வர் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று களுத்துறை நீதவான் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

உயிரிழந்த மாணவியை விடுதிக்கு அழைத்துச் சென்ற இளம் ஜோடியினர், ஹோட்டல் உரிமையாளரின் மனைவி மற்றும் பிரதான சந்தேகநபரின் சாரதியாக இருந்த நபர் ஆகியோர் இவ்வாறு நீதிமன்றுக்கு அழைத்துவரப்பட்டனர்.

சந்தேகநபர்கள் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டபோது உயிரிழந்த சிறுமியின் தாயார் உட்பட சுமார் 100 பேர் நீதிமன்றத்திற்கு முன்பாக காலி வீதியில் சுமார் 50 மீற்றர் தூரம் வரை வரிசையில் நின்று மௌனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"மரணித்த சிறுமிக்கு நீதி கிடைக்க வேண்டும்", "காவல்துறை முறையாக விசாரணை நடத்த வேண்டும்", "தரமற்ற கட்டடம் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்ற பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் 30 நிமிடங்களுக்கு பிறகு போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.